பக்கங்கள் : பத்து
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்13வள்ளுவர் ஆண்டு2028மார்கழி21 திங்கட்கிழமை (05-01-1998)UTHAYAN A Lively National Tamil Daily கதிர்35

# யாழ். தேர்தல் பாதுகாப்புக் குறித்து ஆராய்வதற்கு உயர்மட்ட மாநாடு!

## அனுருத்த தலைமையில் பாதுகாப்பு அமைச்சில்

கொழும்பு, ஜனவரி 5

யாழ். உள்ளூராட்சிச் சபைகளுக்கும் கிளிநொச்சி மாவட்டம் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கும் நடைபெற உள்ள தேர்தல்களின் போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தலைமையில் கொழும்பு பாதுகாப்பு அமைச்சில் இவ்வாரம் உயர்மட்ட மாநாடு ஒன்று நடைபெற இருக்கிறது.

இந்த மாநாட்டில் பொலீஸ் மா அதிபர் டபிள்யூ.பி. ராஜகுரு, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றொஹான் தளுவத்த, வட பகுதி பிரதிப் பொலீஸ் மா அதிபர் கெமிலஸ் அபேகுணவர்த்தன ஆகியோரும் உயர் இராணுவ, பொலீஸ் அதிகாரிகளும் கலந்துகொள்ள உள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட பாதுகாப்பு நிலைமை தொடர்பாக நேரில் ஆராய்வதற்காகப் பொலீஸ்மா அதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போன வியாபாரி சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, ஜன 5

மட்டக்களப்பு தலவாய்ப் பகுதியில் கடந்த 26ஆம்திகதி தேசிய துணைப்படையின ருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடந்த மோதலின்போது காணாமற்போன வியாபாரி ஒருவர் சடலமாக நேற்றுக்காலை மீட்கப்பட்டார்.

குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த கே. கந்தையா (55 வயது) என்ற அந்த வியாபாரி இந்த மோதலில் சிக்கி காணாமற் போயிருந்தார்.

துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் அவரின் சடலம் புதைகுழியில் இருந்து நேற்றுக் காலை தோண்டி எடுக்கப்பட்டது. (இ-21-3)

## முச்சந்தி முரளி



தேர்தல் 'சூடு' பிடிக்க சரியான நேரத்தில் திறக்கினம் எண்டு சொல்லுங்கோ...!

## கோணேஸ்வரி வழக்கு நாளை

மட்டக்களப்பு, ஜன. 5

அம்பாறை சென்றல் முகாமைச் சேர்ந்த குடும்பப்பெண்ணான கோணேஸ்வரி முருகேசம்பிள்ளை கடந்த மே 17இல் கற்பழிக்கப்பட்டு, கிரனேட் வெடிக்கவைத்து கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் வழக்கு நாளை கல்முனை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்படவிருக்கிறது.

மட்டக்களப்பு தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் முறைப்பாடுகளை பதிய பொலீஸ் நிலையத்தில் தனி பிரிவு

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ்.மாவட்டத்தில் நடைபெறும் தேர்தலின் போது இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களை பதிவு செய்ய ஒவ்வொரு பொலீஸ் நிலையத்திலும் தனியான ஒரு பிரிவு அமைக்கப்படும்.

தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தாவடிப்பகுதியில் நேற்று கிரனேட் வீச்சு, துப்பாக்கிச்சூடு!

யாழ்ப்பாணம், ஜன 5

யாழ். உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்க் கட்சி ஒன்றின் ஆதரவாளர்கள் ஆனைக்கோட்டை — தாவடிப் பகுதியில் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த சமயம் ஏற்பட்ட தர்க்கத்தின்போது கிரனேட் வீச்சும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமும் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை அந்தக் கட்சி ஆதரவாளர்கள் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த சமயம் அப்பகுதிக்கு வந்த ஆயுதம் தாங்கிய இனந்தெரியாதவர்கள் சுவரொட்டி ஒட்டக் கூடாது எனக் கூறினராம்

அதன் பின் இருபகுதிக்கும் இடையில் இடம் பெற்ற தர்க்கத்தையடுத்து, துப்பாக்கிப்பிரயோகமும், கிரனேட் வீச்சும் இடம் பெற்றதாகத் தெரியவந்தது.

எனினும் எவருக்கும் உயிராபத்து ஏற்படவில்லை.

(இ-3-9)

## ஒலுமடுவில் தாக்கப்பட்ட ஹெலி பாவிக்க முடியாத அளவு சேதம்!

### பொறியியலாளர் குழு நேற்று அங்கு சென்று பார்வையிட்டது

கொழும்பு, டிச. 5

கடந்த வெள்ளிக்கிழமை ஒலுமடு இராணுவ தளத்தில் தரித்து நின்ற சமயம் விடுதலைப் புலிகளின் மோட்டார் தாக்குதலில் சேதமடைந்த எம். ஐ. 17 ரகக் ஹெலிக்கொப்டர் பாவிக்க முடியாத அளவு பலத்த சேதமடைந்துள்ளது.

விமானப் படையின் பொறியியல் குழு ஒன்று நேற்று அங்கு விஜயம் செய்து அந்தக் ஹெலியைப் பார்வையிட்ட பின்னர் மேற்கண்ட கருத்தை தெரிவித்துள்ளது.

பாவிக்க முடியாத நிலையில் அந்தக் ஹெலி உள்ளதால், அதன் உதிரிப் பாகங்களை வேறு ஹெலிகளுக்குப்

(10 ஆம்பக்கம் பார்க்க)

## ஹெலி மீதான தாக்குதலை கரும்புலிகளே நடத்தினர்

வவுனியா, ஜன. 5

கரிப்பட்டமுறிப்பு பகுதி ஊடாக கரும்புலிகள் ஊடுருவியே ஒலுமடு தளத்தில் தரித்து நின்ற ஹெலிக்கொப்டர் மீது தாக்குதல் நடத்தி, அதை அழித்தனர் என்று ''புலிகளின் குரல்'' நேற்று அறிவித்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் - படையினர் நேற்று மறவன்புலோவில் மோதல்

சாவகச்சேரிமறவன்புலோ, கோயிலாக்கண்டிப் பகுதியில் நேற்று அதிகாலை 2-30மணி முதல் படையினருக்கும், புலிகளுக்கும் இடையில் மோதல் ஒன்று இடம் பெற்றுள்ளதாகத் தெரியவந்தது.

இந்த மோதலில் உயிரிழந்த மூன்று இளைஞர்களின் சடலங்கள் நேற்று மாலை சாவகச்சேரிப் பொலீஸாரால் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

அதே நேரம் - கோயிலாக்கண்டியில் இடம் பெற்ற மோதல் ஒன்றில் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த மூவர் உயிரிழந்ததாகவும்—

அவர்களிடம் இருந்து ரி 56 ரகத்துப்பாக்கி-3, கிளைமோர் குண்டு-1 பற்றறி-ஒருபெட்டி சயனைட் குப்பிகள் -3 ஆகியவற்றை கைப்பற்றியதாகவும்-படை வட்டாரங்கள் தெரிவித்தன.

படையினருக்கு ஏற்பட்ட சேதம் குறித்து தெரியவரவில்லை. (இ-3-21-5-ரி)

## கந்தளாயில் இறங்கி வாகனம் மூலம் திருமலை சென்றார் அனுருத்த!

### புலிகளின் ஏவுகணை அச்சுறுத்தல் காரணம்

கொழும்பு, ஜன. 5

சமீபத்தில் கொழும்பில் இருந்து ஹெலிக்கொப்டரில் திருமலை புறப்பட்ட பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தவும், அவரது குழுவினரும் நேரடியாக திருமலை செல்லாது கந்தளாயில் இறங்கி வாகனம் மூலம் பலத்த பாதுகாப்புக்கள் மத்தியில் திருமலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

கடற்படை பயிற்சி முடித்து வெளியேறியோரின் அணி வகுப்பு கடந்த 21ஆம் திகதி [illegible] படைத் தளத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொள்வதற்காக அனுருத்த ரத்வத்தவும் கடற்படைத் தளபதி சிசில் திரேஸாவும் மற்றும் சிலரும் கொழும்பில் இருந்து ஹெலிக்கொப்டர் ஒன்றில் புறப்பட்டனர்.

இவர்களது ஹெலிக்கொப்டர் நேரடியாகத் திருமலை செல்லாது கந்தளாய்க் குளத்தின் அணைக்கட்டுப் பகுதியில் இறக்கப்பட்டது. அங்கிருந்து அவர்கள் பலத்த பாதுகாப்புக்கள் மத்தியில் தரைமார்க்கமாக வைபவம் நடைபெற்ற திருகோணமலை துறைமுகம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இனவிவகாரத்தில் பாரதீயஜனதா தலையிடாது

### கதிர்காமருக்கு வாஜ்பாய் உறுதி

கொழும்பு, ஜன. 5

பாரதிய ஜனதா கட்சி பதவிக்கு வந்தால் இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் தலையிடமாட்டாது.

தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளைக் கருத்தில் கொண்டு இப்பிரச்சினை திருப்திதரும் வகையில் தீர்க்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கமலபாரதி சரவணமுத்து

(அ.எ.சே. தரம் 1, கல்வித்திணைக்களம் வலயம்1)

கல்வித்திணைக்களம் வலயம் 1 இன் பொது நிர்வாகக் கிளைத் தலைவராகக் கடமை புரிந்த திருமதி கமலபாரதி சரவணமுத்து காலமானார்.

இவர் சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த நாகலிங்கம் சரவணமுத்துவின் அன்பு மனைவியும், செல்வி குக சொரூபி (வேம்படி மகளிர் கல்லூரி), செல்வன் ஜெயகுமரேஸ் (யாழ். மத்திய கல்லூரி), செல்வன் விக்கேஸ் (புனித ஜோன் பொஸ்கோ) ஆகியோரின் அன்புத் தாயாரும், கொக்லங்கலட்டியை வசிப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற கந்தையாவினதும் திருமதி பகவதியினதும் சிரேஷ்ட புத்திரியும், திரு வசீகரனின் சகோதரியும், சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த நாகலிங்கத்தினதும் நாகேஸ்வரியினதும் அன்பு மருமகளும், திருமதி இந்திராதேவி, சங்கானையைச் சேர்ந்த திரு. இராமநாதன், திருமதி வெற்றிமாதேவி, திருமதி ராணி, திருமதி தேவி, திருமதி நாகேஸ்வரி, திரு. ஆறுமுகசாமி நைனார் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (5-1-98) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து இறுதிக்கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. சரவணமுத்து
(கணவர்)

18, செம்மணி வீதி,
நல்லூர்.

(சி/2554)

## திருமதி அருளானந்தஐயர் இராஜேஸ்வரி அம்மா

பன்னாலையைச் சேர்ந்த திருமதி அருளானந்தஐயர் இராஜேஸ்வரி அம்மா அவர்கள் 04-01-98 ஞாயிறு அன்று உதயத்தில் சிவபதம் எய்தினார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் மருமகன் சண்முகநாதக்குருக்கள் (வரதர்) யாழ்ப்பாணம் 'இல. 192 ஆம் லேன், பிறவுண் வீதியிலுள்ள இல்லத்தில் குடும்பத்தினர் சகாயமாக நடைபெற்றன. அன்னாரின் பூதவுடல் அன்றுபிற்பகல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் யாவருக்கும் மனவேதனையுடன் அறியத்தருகின்றோம்.

தகவல்:
அன்பர் ஷர்மாஜி
(மகன்)

பன்னாலை.

(52388)

## சோமசுந்தரம் அமிர்தலிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

வேலணையைப் பிறப்பிடமாகவும், கட்டுடையை வதிவிடமாகவும் கொண்ட சோ. அமிர்தலிங்கம் 03-01-98 இல் லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் - சின்னத்தங்கம் அவர்களின் மகனும், ஞானாம்பிகையின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், விபுலானந்தன் (UK), சாந்தி (UK.), ரோகி (கனடா), அனுசீலன் (UK.), ஜெசீலன் (UK.) ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற மார்க்கண்டு நாகபூரணம் மற்றும் சண்முகரத்தினம், மகேஸ்வரி, ஜீவரட்ணம் ஆகியோரின் சகோதரரும், விஜயலட்சுமி, துரைராஜா, நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.சோ சண்முகரத்தினமும்
சகோதரர்களும்

145/4, நாவலர் வீதி,
பிரப்பங்குள லேன்,
யாழ்ப்பாணம்.

(52377)

## செல்வி விஜயரட்ணம் விஜயமலர்

2-ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறையைச் சேர்ந்த செல்வி விஜயரட்ணம் - விஜயமலர் 03-01-98 அன்று இத்தாலியில் அகால மரணமானார்.

அன்னார் ச விஜயரட்ணம் (குட்டிகடை) வி. அரியமலர் தம்பதிகளின் அன்பு மகளும், வி. ஜெகதீஸ்வரன் (இத்தாலி), வி. விஜயகுமார், வி நடராசா (நோர்வே), வி. விஜயமாலா, வி. விஜயராணி, வி. செல்வராணி, வி. செல்வக்குமார், வி. ஜெகன் ஆகியோரின் அன்புச்சகோதரியும், வி. சுசீலாவின் மைத்துனியும், வி. சிறிதரன். வி. அஷ்வினி, வி. அபிராம் ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 3-1-98இல் இத்தாலியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. விஜயரட்ணம்
(தந்தை)
(குட்டி கடை)

2 ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.

(52383)

## அரச செலவில் சடலம் அடக்கம்

தென்மராட்சி, ஜன. 5

சாவகச்சேரி ஆஸ்பத்திரி பிரேத அறையில்நான்கு நாள்களாக வைக்கப்பட்டிருந்த சடலம் நேற்று அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

கடந்த 31 ஆம் திகதி நுணாவில் பகுதியில் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் வீதியோரத்தில் கிடந்த 70 வயது மதிக்கத்தக்க வயோதியர் ஒருவர் கைதடி, நுணாவில் கிராம அலுவலரால் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த வயோதியர் அன்று இரவே மரணமாகியதால் அடையாளம் காண்பதற்காக சாவகச்சேரி ஆஸ்பத்திரி பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டிருந்தது.

இச் சடலத்தை எவரும் உரிமை கோராததால் சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி நா. தர்மேந்திரர் சடலத்தை அரச செலவில் அடக்கம் செய்யுமாறு ஆஸ்பத்திரி நிர்வாகத்திற்கு உத்தரவிட்டார். (இ-117)

## பிரியாவிடை

தென்மராட்சி, ஜன. 5

பளைப்பிரதேசசெயலர்பிரிவில் தர்மக்கேணி கிராம அலுவலராக கடமையாற்றி இளைப்பாறிச் சென்ற சி. விநாசித்தம்பிக்கு பிரதேச செயலக நலன்புரிக்கழகத்தினால் கடந்த வெள்ளியன்று பிரியாவிடை அளிக்கப்பட்டது.

பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெற்ற பிரியாவிடை விழாவில் நிர்வாக உத்தியோகத்தர் தா. சுவாமிநாதன், உதவித் திட்டமிடல் அலுவலர் எஸ். குணாளசிங்கம், கிராமிய அபிவிருத்தி அலுவலர் ம. அழகேந்திரன் உட்பட பிரதேச செயலகத்தில் உள்ள அனைத்துப் பிரிவுகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் அவரின் சேவையைப் பாராட்டி உரையாற்றினர். (ஐ-117)


லிபேட்டி சினிமா
அச்சுவேலி.
இன்று
30 அடி அகலத் திரையில்
விஜய், சங்கீதா
நடித்த
பூவே உனக்காக
குடும்பச் சித்திரம்
நேரம்: 10-30, 2-30
(52238)


# மோட்டார் சைக்கிளில் சென்ற படையினர் மீது தாக்குதல்!

## திருமலைப் பகுதியில் சம்பவம்

மட்டக்களப்பு, ஜன 5

திருகோணமலை மாவட்டம் மல்லிகைத்தீவில் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரு படையினர் உயிரிழந்தனர்.

கல்லாறு முகாமில் இருந்து கட்டைபறிச்சான் முகாமுக்கு சென்று கொண்டிருந்த சமயமே விடுதலைப் புலிகள் பதுங்கியிருந்து இத் தாக்குதலை மேற்கொண்டனர்.

படையினர் பயணம்செய்த மோட்டரர் சைக்கிளையும், அவர்களிடமிருந்த ரி-56 ரக துப்பாக்கிகள் இரண்டையும் புலிகள் கைப்பற்றினர்.

இந்த மோதலில் சிக்கிப் பொது மகன் ஒருவர் உயிரிழந்தார். (இ-3-21-164)

# சரசாலையில் இருவர் மரணம்!

யாழ்ப்பாணம், ஜன 5

தென்மராட்சியில் மீசாலைக்கும் — சரசாலைக்கும் இடையில் நேற்று முன்தினம் அதிகாலை 4 மணி முதல் மோதல் ஒன்று இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இம் மோதலில் உயிரிழந்த 2 இளைஞர்களின் சடலங்கள் சாவகச்சேரி பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

அதேநேரம்— மீசாலையில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் இரு விடுதலைப்புலி உறுப்பினர்கள் உயிரிழந்ததாகவும்—

அதில்ஒருவர் உளவுத்துறையைச் சேர்ந்த நல்லவன்என்று இனங்காணப்பட்டதாகவும்— பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களிடம் இருந்து ரி.56 ரக துப்பாக்கி ஒன்று, மகஸின்-4, கிரனேட்-4, சயனைட்-2 ஆகியவற்றையும் கைப்பற்றியதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(இ-3-21-117)

## சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது

யாழ். மத்திய கல்லூரி விஞ்ஞான மன்றத்தால் இன்று 05-01-98 திங்கட்கிழமை நடத்தப்படவிருந்த சீட்டிழுப்பு வைபவம் 20-02-1998 இற்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதைத் தயவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி

விஞ்ஞான மன்றம்,
யாழ் மத்திய கல்லூரி.

(52382)

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி கமலபாரதி சரவணமுத்து

(அ. எ. சே. தரம் I, கல்வித்திணைக்களம், வலயம் I)

கல்வித்திணைக்களம் வலயம் I இல் கடமையாற்றிய எமது சக உத்தியோகத்தராகிய திருமதி கமலபாரதி சரவணமுத்துவின் திடீர் மறைவால் அதிர்ச்சியடைவதுடன் எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஒரு திறமையான உத்தியோகத்தரின் இழப்பு கல்விப் புலத்திற்கே ஒரு பேரிழப்பாகும்.

அன்னாரின் மறைவால் துயருறும் கணவர், பிள்ளைகள், குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

நலன்புரிக் கழகம்
யாழ். கல்வித்திணைக்களம்,
வலயம் I

(52385)


யூனிவேர்சல் கந்தர்மடம்

1998

புதிய கல்வியாண்டு
ஆண்டு 4
முதல்
O/L வரை
ஆரம்பமாகிவிட்டது.

ஆண்டு 9,10,11
ஆங்கில இலக்கியம்
திரு. தெய்வதவபாலன்

A/L 2000

| கணித, உயிரியல் பிரிவு | கலை, வர்த்தகப் பிரிவு |
|---|---|
| பௌதிகவியல் திரு. ஜெயசிலன் | கணக்கீடு திரு. தவா |
| இரசாயனவியல் திரு. சிவத்திரன் | பொருளியல் திரு. விக்கி |
| தூய/ பிரயோக கணிதம் திரு. கருணா | வர்த்தகம் திரு. பாஸ்கரன் |
| தாவரவியல் திரு. பாலா | அளவையியல் திரு. யுகபாலசிங்கம் |
| விலங்கியல் திரு. பாலதாஸ் | இந்துநாகரிகம்/ இந்துசமயம் திரு. சிவமகாலிங்கம் |
| | தமிழ் திரு. தங்கராஜா |
| | வணிகப்புள்ளி விவரவியல் திரு. ரவிசங்கர் |

ஆரம்பம்: 10-01-1998 காலை 8-00 மணி

97, 98 A/L மீட்டல் வினாவிடை வகுப்புகள் நடைபெறுகின்றன.

(52387)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹொங்கொங் பறவைக் காய்ச்சல்:

# நாய்கள், பூனைகள் மீதும் சோதனை!

ஹொங்கொங், ஜன .5

''பறவைக் காய்ச்சல்'' (Bird Flu) எனப்படும் கொடிய வைரஸ் நோய் தொடர்பான பரிசோதனை நடவடிக்கையை ஹொங்கொங் அதிகாரிகள் விரிவு படுத்தியுள்ளனர்.

கோழிகள் மூலம் பரவியதாக நம்பப்படும் இந் நோய்க்கிருமிகள் நாய்கள், பூனைகள், எலிகள் என்பனவற்றிலும் பரவியுள்ளதா என்பதைக் கண்டறியும் சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நோய் பரவாமல் தடுக்கும் பெரும் நடவடிக்கையாக சுமார் 13 லட்சம் கோழிகள், வாத்துக்கள், தீக் கோழிகள் என்பன அழித்து ஒழிக்கப்பட்டதைத் தொடர்ந்து அடுத்த கட்டமாக இந் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

''எச் - 5 என்-1' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த வைரஸ் காய்ச்சலினால் ஹொங்கொங் நிலப்பரப்பில் நால்வர் உயிரிழந்துள்ளனர்.

# பாகிஸ்தானில் கோர வீதி விபத்தில் 65 பேர் தீயில் எரிந்து மரணம்?

இஸ்லாமாபாத், ஜன. 5

பாகிஸ்தானில் இடம் பெற்ற மிகக் கோரமான வீதி விபத்து ஒன்றில் 65 க்கு மேற்பட்டோர் தீயில் கருகி உயிரிழந்து விட்டதாக அஞ்சப்படுகிறது.

இஸ்லாமாபாத்தில் இருந்து 35 கிலோமீற்றர் தொலைவில் ஷேகூபூரா என்னும் இடத்தில் இந்த விபத்து நேர்ந்தது.

மிகவேகமாகவந்து கொண்டிருந்த டிரக் வண்டி ஒன்று வீதியின் வளைவு ஒன்றில் திரும்பிய போது தடம்புரண்டது. அவ்வேளை மறு புறமாக வந்து கொண்டிருந்த பெற்றோல் தாங்கி வாகனம் ஒன்று டிரக்குடன் மோதிச் சிதறியதில் பெரும் தீ மூண்டது. கரும்புகை மண்டலத்துடன் மூண்ட தீயில் வீதியில் வந்த வேறு மூன்று வாகனங்களும் சிக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் பொது மக்கள் பலர் சிக்கி உயிரிழந்தனர்.

65 பேர் வரை தீயில் சிக்கி கருகிப் பலியானதாக முற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. எனினும் உயிரிழப்புகள் தொடர்பான தகவலை உடனடியாக உறுதி செய்ய முடியவில்லை.

பாகிஸ்தானில் அண்மைய ஆண்டுகளில் இடம்பெற்ற மிக மோசமான வீதி விபத்துச் சம்பவம் இது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

உலக அரங்கில்

# 1,700 வருடம் பழைமைமிக்க நகரம்

கெய்ரோ, ஜன.5

ஆயிரத்து 700 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட ரோமக்கட்டடக் கலையின் சிறப்பு அம்சங்களைக் கொண்ட பண்டைய நகரத்தின் சிதைவுகள் எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

எகிப்தின் மேற்குப் பகுதி பாலைவனத்தில் கடந்த நான்கு வருடகாலமாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வு வேலைகளின் பின் இந்தப் புராதன நகரம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பெனாசிர் மீது குற்றப் பத்திரம் தாக்கல்

பாகிஸ்தானில் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ, அவரது கணவர் அலிசர்தாரி, அவரது தாயார் நூஸ்ரத் பூட்டோ ஆகியோர் மீது ஊழல் தொடர்பான குற்றப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

விசாரணைகளை மேற்கொண்ட ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையிலான ஆணைக்குழு மேல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரங்களைத் தாக்கல் செய்துள்ளது.

# கிழக்கு ஆசிய பொருளாதார நெருக்கடியால் பல லட்சம் வெளிநாட்டவர்கள் வேலை இழப்பு!

கோலாலம்பூர், ஜன. 5

**கிழக்கு ஆசிய நாடுகளை வெகுவாகப் பாதித்திருக்கும் பொருளாதார நெருக்கடி காரணமாக அங்கு பணிபுரியும் லட்சக் கணக்கான வெளிநாட்டுத் தொழிலாளர்கள் வேலை இழக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.**

மலேசியாவில் தற்போது பணிபுரியும் 10 லட்சம் வெளிநாட்டு தொழிலாளர்கள் நாட்டைவிட்டு வெளியேற்றப் படும் நிலையில் உள்ளனர் என்று கோலாலம்பூரில் அதிகாரிகள் தெரிவித்தனர். இவர்களில் பெரும்பாலானோர் இந்தோனேசியர்கள் ஆவர்.

கடந்த ஜூலையில் கிழக்கு ஆசிய வட்டாரத்தில் நாணயம் மற்றும் பங்குச் சந்தை என்பவற்றில் மளமளவென்று ஏற்பட்ட சரிவு காரணமாக 20 லட்சம் பேர் ஏற்கனவே வேலை இழந்துள்ளனர்.

தாய்லாந்தில் சட்டவிரோதமாக தொழிலில் ஈடுபட்டுள்ளோரை வெளியேற்றிவிட்டு அந்நாட்டு பிரஜைகளுக்கு மட்டும் வேலை வாய்ப்புக்கள் கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையில் அரசு பிரசார நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

சுமார் 10 லட்சம் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் அல்லது நாட்டின் மொத்த தொழிலாளர்களில் பத்தில் ஒரு பங்கினர் அடுத்த ஆண்டு நாட்டை விட்டு வெளியேற்றப் படுவர் என எதிர்பார்க்க முடியும் என்று மலேசிய உள்துறை துணை அமைச்சர் தெரிவித்ததாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

பங்களாதேஷ், இந்தியா, தாய்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களும் பாதிக்கப்படுவோரில் அடங்குவர்.

இதனால் தாய்லாந்திலும், இந்தோனேசியாவிலும் மேலும் பெரும் தொழில் நெருக்கடிப் பிரச்சினைகள் உருவாகும் என்றும் கணிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# டயானா சமாதிக்கு மக்கள் செல்லலாம்

## விரைவில் அனுமதி கிடைக்கும்

லண்டன், ஜன. 5

கார் விபத்தில் கொல்லப்பட்ட பிரிட்டிஷ் இளவரசி டயானாவின் உடல் புதைக்கப்பட்ட இடத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்த பொதுமக்கள் அனுமதிக்கப்படவுள்ளனர்.

டயானாவின் உடல் புதைக்கப்பட்ட இடத்துக்கு தற்போது பொதுமக்கள் சென்று அஞ்சலி செலுத்த அனுமதிக்கப்படவில்லை.

அல்ரொப்பில் உள்ள ஸ்பென்ஸர் குடும்பத்தினரின் குடும்ப இடுகாட்டில் பூங்காவின் நடுவே நீர்த்தடாகம் ஒன்றின் மத்தியில் அமைந்த சிறு தீவு போன்ற எழில் கொஞ்சும் இடத்திலேயே டயானாவின் உடல் புதைக்கப்பட்டது. அங்கு சென்று அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்த அனுமதிக்குமாறு லட்சக்கணக்கானோர் உலகின் பல பகுதிகளில் இருந்தும் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இதனை அடுத்தே டயானா சமாதிக்கு பொதுமக்களை அனுமதிக்க ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

எதிர்வரும் ஜூலை, ஓகஸ்ட் மாத காலப்பகுதியில் பொதுமக்கள் அங்கு சென்று அஞ்சலி செலுத்தக் கூடியதாக இருக்கும். இதற்கான நுழைவுச் சீட்டுக்கள் விற்பனைக்கு வரவுள்ளன. (ஐ)

# கொங்கோ ஜனநாயக குடியரசில் கொலராவுக்கு 217 பேர் பலி!

கிசங்கானி, ஜன. 5

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் (முன்னாள் ஸயர்) வட கிழக்கு நகரான கிசங்கானியில் கொலரா பரவியதில் 217 பேர் பலியாகியுள்ளதாக ஐ. நா. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இறந்தவர்களில் பெரும்பாலானோர் இளவயதினரான படைச் சிப்பாய்கள் ஆவர்.

கிசங்கானி நகரில் வேகமாகப் பரவும் இந்நோயினால் இதுவரை ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் கரையோரப் பகுதியில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கே இந்நோய் பரவக் காரணம் என்று ஐ. நா. தெரிவித்துள்ளது. (ஐ)

# பங்களாதேஷில் கடும் குளிருக்கு 118 பேர் பலி!

டாக்கா, ஜன. 5

பங்களாதேஷில் நிலவிவரும் கடும் குளிரினால் கடந்த சில நாள்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 118 ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

# 'எல்-நைனோ' அனர்த்தம்

லீமா, ஜன. 5

பெரு நாட்டில் 'எல் - நைனோ காலநிலை அனர்த்தத்தினால் கடந்த சில வாரங்களில் 28 பேர் பலியாகியுள்ளனர்.

கடும் வெப்பம் மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டன.

'எல்-நைனோ' அனர்த்தம் காரணமாக ஒரு பகுதியில் வெப்பமும், இன்னொரு பகுதியில் கடும் மழைவீழ்ச்சியும் ஏற்படுகின்றன.

பெருவின் பல பகுதிகளில் வெள்ளப் பெருக்கினால் ஆயிரத்துக்கும் அதிகமானோர் வீடுகளை இழந்துள்ளனர். (ஐ)


# அன்பான வேண்டுகோள்

உதயன்-சஞ்சீவி பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்கென ஒப்படைக்கப்படும் விளம்பரங்கள் பலவற்றை இடநெருக்கடி காரணமாக அடுத்த நாள் பதிப்பில் வெளியிட முடியாத நிலை ஏற்படுகிறது.

இதனைத் தவிர்ப்பதற்கு உதவுமாறு விளம்பரதாரர்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அடுத்த நாள் பத்திரிகையில் வெளிவர வேண்டிய விளம்பரங்களை இயன்றவரை முதல் நாள் பி.ப. 3 மணிக்கு முன்னர் எமது விளம்பர கருமபீடத்தில் ஒப்படைத்து ஒத்துழையுங்கள்.

முன்கூட்டியே விளம்பரங்களை ஒப்படைத்து இடநெருக்கடியைத் தவிர்த்து, அவை தவறாது வெளிவருவதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

உங்கள் ஆதரவுக்கு என்றும் எங்கள் இதய பூர்வமான நன்றிகள்.

விளம்பர முகாமையாளர்.

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



மக்கள் சேவையில் எம்மைப் பலப்படுத்தவும், மக்கள் சேவையை எமக்குள் பகிர்ந்து கொள்ளவும்

உங்கள் சின்னம் நங்கூரம்

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி

(புளொட்)

விளம்பர இல. (67656)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

புதிய அல்லது பாவித்த பழைய தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் மற்றும் றோணியோ இயந்திரங்கள் தேவை. தொடர்பு:- R.மருதலிங்கம், 8/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (52349)

### A/L கணித வகுப்புகள்

A/L வகுப்பிற்கான தூய, பிரயோக கணித பிரத்தியேக வகுப்புகள் 7.1.98 (புதன்) ஆரம்பமாகவுள்ளன. தொடர்பு: ஆசிரியர் ஸ்ரீறாஜ் 108, பிறவுண் வீதி. (நீராவியடி பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் விறகு காலை முன்பாக) (52311)

### மகாதேவா ஜோதிடம்

''வியாழமாற்றம்'' புத்தகம் எங்கும் கிடைக்கும். சோதிடரை - கடை - 626, பருத்தித்துறை வீதி, (நல்லூர் கந்தசாமி கோயில் முன்பாக) காலை 10 மணி தொடங்கி பிற்பகல் 2 மணி வரையும். ஏனைய நேரங்களில் வீடு - 140, செல்லர் வீதி, (கல்வியங்காடு) இடத்திலும் தினசரி சந்திக்கலாம். [சி/2429]

### வகுப்பு

புலலாங்குழல, ஓகன, கிற்றார் ஆகியவகுப்புக்கள்மாலை 2.00 மணியிலிருந்து நடைபெறுகின்றன. தொடர்பு: சரவீணா, இல:23, குறோசற் வீதி, சுண்டுக்குளி (கல்வி வலயம் ஒன்றின் அலுவலகத்துக்கு அருகில்). [51731]

### யாழ்ப்பாணத்தில்

அந்த ஆறு மாதங்கள 275 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் கைவண்ணத்தில் உருவானது. வரலாற்றை மறக்கலாமா? வாசித்துவிட்டு உங்கள் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் அனுப்புங்கள். ரூபா 50. [52150]

### திருமண சேவை

68 ஆம், 72 ஆம் ஆண்டு பிறந்த சித்திரை நட்சத்திரமுடைய லண்டனில் நிரந்தர வதிவிட உரிமையும் அங்கு அழைக்கக்கூடிய வசதியுமுள்ள எக்கவுண்டன்ளான பெண்களுக்கு தகுதியுள்ள மணமகன் தேவை, 'துர்க்கா திருமணசேவை' 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [52364]

### புலமைப் பரிசில்


9 ஆவது புலமைப்பரிசில் வினாத்தாள்கள் விடைகளுடன் பெற்றுக்கொள்ள Bond., யாழ்ப்பாணம். [5236]

### அங்குரார்ப்பணம்

பண்டத்தரிப்பு காலையடியில் இப்பகுதி மக்களின் நலன்கருதி ஸ்ரீ முருகன் என்ற பெயரில் சனசமூக நிலையம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. (ஐ-5)


**AL 2000**
(கலை, வர்த்தகம்)
ஆரம்பம்:
**10 - 01 - 1998**
(காலை 8 மணி)
அனுமதிகள்
01 01-98இல் இருந்து வழங்கப்படுகின்றன.
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்.
(49897)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் சிவசுப்பிரமணியம் சிவதாஸ்

தோற்றம்: 29-03-1945 மறைவு: 05-12-1997

மட்டுவில் ஸ்ரீவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் பொருளாளராகவும், மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தின் அபிவிருத்திச்சபை உறுப்பினராகவும், மட்டுவில் உற்பத்திக்குழுவின் செயலாளராகவும் இருந்து இந்நிறுவனங்களின் வளர்ச்சிக்கும், மக்களின் முன்னேற்றத்திற்கும் தன்னையே முழுமையாக அர்ப்பணித்து சேவை புரிந்து மறைந்த சி. சிவதாஸ் அவர்கள் மக்கள் மனதில் வானுறையும் தெய்வமாக போற்றப்படுகின்றார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மட்டுவில்
ஸ்ரீவேற்பிள்ளை சனசமூக நிலையம்,
யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சபை.
[சி/2551]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் முத்துக்குமாரு ஏரம்பமூர்த்தி

(பண்டிதர், வாத்தியார்)

தோற்றம்: 13 - 08 - 1913 மறைவு: 08 - 12 - 1997

எமது குடும்பத்தின் கலங்கரை விளக்கம் சமுதாயத்துக்கு இளம் சூரியனாக விளங்கிய எமது தந்தையார் இவ்வுலக வாழ்வை நீத்த பொழுது இறுதிச் சடங்குகளிலும், எமது துன்பத்திலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், கண்ணீர் அஞ்சலியைப் பிரசுரித்த கோல்டன் பிளாஸ் கழகத்தினருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

7 - 1 - 98 இல் நடைபெறும் அன்னாரின் நினைவு மதிய போசனத்திலும், சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் (வி. மு. தெரு. பருத்தித்துறை) நடைபெறும் நினைவுக் கூட்டத்திலும் பங்கு பற்றுமாறு வேண்டுகின்றோம்.

-குடும்பத்தினர்.

நல்லூர் வீதி,
பருத்தித்துறை.
(52284)


இலவசம்! இலவசம்!!
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு டசின்
**CURVFORM & CARINA**
பிறசியர்களுக்கும்
ஒரு யுனைற்றெட் பஞ்சாங்கக் கலண்டர்
**இலவசம்**
சகல புடைவைக் கடைகளிலும் கிடைக்கும்
யுனைற்றெட் பஞ்சாங்கக் கலண்டர்
மலிவு விலையில்
மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள
மேலும் விவரங்களுக்கு:
**சிறி முருகன்**
303, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(52358)



தென் இந்திய திருச்சபை, யாழ் ஆதீனம்
**தொழிற் பயிற்சி நிலையம்,**
மானிப்பாய்.
உயர்கல்வி - கேக் ஐசிங்
**CAKE ICING ADVANCE COURSE**
புதிய வகுப்புகள் இன்று (5-1-98) ஆரம்பம்.
இடம்: கிறீன் வைத்தியசாலை வளாகம்
நேரம்: மாலை 1.30 மணி
புதிய மாணவிகள் அனுமதி உண்டு.
திட்டப் பணிப்பாளர்.
மானிப்பாய்.
(52378)


## கண்ணீர் அஞ்சலி

எமது மாவட்ட நீதிமன்ற குடும்ப ஆலோசகர்

### திருமதி வேதா சிவதாசன்

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாவட்ட நீதிபதி, பதிவாளர்,
மற்றும் அலுவலர்கள்.
மாவட்ட நீதிமன்றம்.
யாழ்ப்பாணம்.

(52339)

## நீங்கா நினைவலைகள்



உதயம்: 15-10-1943

மறைவு: 17 12-1996

### திருமதி சரஸ்வதி இராஜேஸ்வரன்

திதி: 5- 1- 1998

மாண்டெங்கும் போகவில்லை அம்மாவே எம்மனதில் ஆண்டொன்றாய் வாழ்கின்றாய்! ஆனாலும் அந்நாளில்
அள்ளியள்ளி ஊட்டியவுன் ஆண்டுத் திவசத்தில் கிள்ளியெறிகின்றோமே கண்கலங்கி நிற்கின்றோம்!
அரன்தன் அடியில் அமைதி பெறுக!

இராஜேஸ்வரன்;
வானதி, வாசவன், வாகீசன், (லண்டன்)
அருள்நேசன், ஸரண்.
உறவினர், நண்பர்கள்.

தென்னகம்,
பெரியதோட்டம்,
கரவெட்டி.

(சி/ 2540)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்திச் சாரம்

### குருநகரில் மின் கம்பங்கள் அமைப்பு

குருநகர், ஜன. 5

இலங்கை மின்சார சபையினர் குருநகர்ப் பகுதியில் புதிய மின் கம்பங்கள் அமைக்கும் பணியை துரித கதியில் ஆரம்பித்துள்ளனர்.

சேதமடைந்திருந்த மின் கம்பங்கள் அகற்றப்பட்டு புதிய மின் கம்பங்கள் நடப்பட்டு இணைப்புகளும் போடப்பட்டு வருகின்றன. இப் பகுதிக்கான மின் விநியோகம் தற்போது தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. (ஐ-51)

### உருளைக்கிழங்கு வந்தது

அரியாலை, ஜன. 5

கொழும்பிலிருந்து 'வாதுவ' கப்பலில் உருளைக்கிழங்கு எடுத்துவரப்பட்டுள்ளது.

இதனையடுத்து யாழ்ப்பாணத்தில் உருளைக்கிழங்கு விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

### மண்வெட்டி வழங்கல்

நவாலி, ஜன. 5

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வீட்டுத்தோட்டம் செய்யும் 48 பேருக்கு கடந்த வாரம் மண்வெட்டி மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ஐ-100-5)

### மூளை மலேரியாவால் பெண் மரணம்

தென்மராட்சி, ஜன. 5

மூளை மலேரியாவால் பாதிக்கப்பட்ட வயோதிபப் பெண் ஒருவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிறிதுநேரத்தில் மரணமானார்.

சாவகச்சேரி வினாசித்தம்பி வீதியைச் சேர்ந்த எஸ். சிதம்பரம் (வயது 57) என்பவரே மரணமானவராவார். (ஐ-117-5)

### கைப்பணிப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜன. 5

பனம் பொருள்களின் துணையுடன் கைப்பணிப் பொருள்களை ஆக்கும் முறை பற்றி பிரதேச ரீதியாக போதனாசிரியர்கள் மூலம் பனைஅபிவிருத்திச்சபையினர் பயிற்சியளித்து வருகிறார்கள்.

இதுவரை சுமார் 16 ஆயிரத்து 800 பேர் பயிற்சி பெற்று வெளியேறியுள்ளனர். (ஐ-8-5)

### வீட்டுப் பொருள்கள் திருட்டு

வடமராட்சி, ஜன. 5

வல்வெட்டித்துறை நகரப் பகுதியில் ஆட்கள் இல்லாத வீடுகளில் வீட்டுப்பாவனைப் பொருள்களும், ஏனைய பொருள்களும் திருடப்படுவது அதிகரித்துள்ளது.

இங்குள்ள வீடுகளிலிருந்து அம்மி, குளவி, ஆட்டுக்கல், பாத்திரங்கள் மற்றும் தென்னை மரங்களிலிருந்து தேங்காய்கள், வீட்டு ஓடுகள் கதவுகள், ஜன்னல்கள் என்பன திருடப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-173-5)

### பாடசாலை உபகரணங்கள் வழங்கல்

வடமராட்சி, ஜன. 5

அல்வாய் வடக்கு இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்விபயிலும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மாணவர்களுக்கு இலவச பாடசாலை உபகரணங்கள் இன்று திங்கட்கிழமை வழங்கப்படவுள்ளன.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ணசாரதா சேவாச்சிரமத்தால் இவை வழங்கப்படும். (ஐ-172)

### பயிற்சி வகுப்பு

யாழ். மாநகர சபை நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுகாதார ஊழியர்களுக்கான "கட்டுளமைப் பருவ சுகாதாரம்" பற்றிய இரு நாள் பயிற்சி வகுப்பு இன்று திங்கட்கிழமை தொடக்கம் 7ஆம் திகதி புதன் கிழமை வரை யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். (ஐ-5)

### ஸ்ரெச்சரில் பிரசவம்

வெளி நோயாளர் பகுதியிலிருந்து ஸ்ரெச்சரில் தள்ளிக்கொண்டு செல்லப்பட்ட கர்ப்பிணித் தாய் ஒருவர் பிரசவ வார்ட்டுக்கு அருகில் ஸ்ரெச்சரிலேயே ஆண் சிசுவை பிரசவித்தார்.

இச்சம்பவம் மந்திகை மருத்துவ மனையில் இடம்பெற்றது. (ஐ-109-5)

### பஸ் சேவை நிறுத்தம்

பருத்தித்துறையிலிருந்து மாலை 4.15 மணிக்கு வல்வெட்டித்துறை ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் பஸ் சேவை கடந்த முதலாம்திகதி முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை பருத்தித்துறையிலிருந்து தினமும் மாலை 4.15 மணிக்கு இறுதி நேர பஸ் 750பாதை ஊடாக யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது (ஐ-109-5)

### நீர் விநியோக ஆரம்ப வைபவம்

வட்டுக்கோட்டை, ஜன. 5

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் உதவியினால் மறுசீரமைக்கப்பட்ட வட்டு. கொத்தமுதலி கோயிலடி கிராமிய குடி தண்ணீர் விநியோகத்திட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இவ் வைபவத்தில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரக பிரதிநிதி, வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் மற்றும் யாழ். செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ 12-5)

### நியமனம்

தென்மராட்சி, ஜன. 5

பளை வேம்போடுகேணி சி. சி. த. க. பாடசாலை அதிபர் கா. கனகராசா கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதையடுத்து அவரது இடத்திற்கு இயக்கச்சி அ. த. க. பாடசாலை அதிபர் சி. இராமலிங்கம் ஜனவரி முதலாம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-117)

# யாழ். மாநகரப் பகுதியில் மேலும் நான்கு போஷாக்கு நிலையங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ். மாநகர சபைப் பகுதியில் நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேலும் நான்கு போஷாக்கு புனர்வாழ்வு நிலையங்கள் விரைவில் திறக்கப்படவுள்ளன.

நல்லூரில் எதிர்வரும் 8 ஆம் திகதியும், கொழும்புத்துறை கிழக்கில் 12 ஆம் திகதியும் குருநகரில் 14 ஆம் திகதியும், வண்ணார்பண்ணையில் 16 ஆம் திகதியும் இந்த நிலையங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

யுனிசெவ் உதவியுடன் அமைக்கப்படும் இந்த நிலையங்களில் போஷாக்கு குறைவான 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகள், மற்றும் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்களுக்கு போஷாக்கு உணவு வழங்கப்படும்.

ஒவ்வொரு நிலையங்களிலும் 50 பிள்ளைகளுக்கும், 30 தாய்மாருக்கும் போஷாக்கு உணவு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாநகரப் சுகாதாரப் பகுதியினால் தென்னிலங்கை திருச்சபைகளின் சிறுவர் நலச்சங்க உதவியுடன் ஏற்கனவே நான்கு போஷாக்கு நிலையங்கள் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

மேலும் 9 நிலையங்கள் திறப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. (ஐ-5)

### ஆசிரிய கலாசாலை ஆரம்பம்

பலாலி, கோப்பாய் ஆகிய இரண்டு ஆசிரிய கலாசாலைகளும் இம்மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகுமென கலாசாலை அதிபர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

### சாவகச்சேரி நகர்ப்பகுதிக்கு தொலைபேசி

தென்மராட்சி, ஜன 5

சாவகச்சேரிநகரப்பகுதிக்கு மார்ச் மாதம் முதல் தொலைபேசி வசதி கிடைக்கவுள்ளது.

மோட்டர் றோலா (மைகோறோலைன்)என்னும் தொலைபேசி தொடர்புகள் பெப்ரவரி மாதத்திலும், சாதாரண தொலைபேசித் தொடர்புகள் மார்ச் மாதத்திலும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொலைபேசிகள் தேவைப்படுவோர் தட்டச்சு செய்யப்பட்ட விண்ணப்பங்களை சாவகச்சேரி சிவில் நிர்வாக அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு சாவகச்சேரி நகர சிவில் நிர்வாக அதிகாரி அறிவித்துள்ளார். (ஐ-117)


**ஸ்ரீ செல்வா சினிமா**

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

தினசரி: 10-30 2-30
(ப. நே.)

அநேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் இரு நாள்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

விஜய்
பேபிசாலினி
நடித்த
**காதலுக்குமரியாதை**

(52381)


### புதிய கல்வி முறை முதலில் கம்பஹாவிலேயே அறிமுகம்

கொழும்பு, ஜன. 5

புதிய கல்விமுறையை இவ்வாண்டில் கம்பஹா மாவட்டத்தில் மாத்திரம் பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்துவது என கல்வி மறுசீரமைப்புத் தொடர்பான ஜனாதிபதி செயலணிக் குழு தீர்மானித்துள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் இது வெற்றியளிக்குமாயின் 1999 ஆம் ஆண்டில் நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் புதிய கல்வி முறையை அமுல் படுத்துவதென செயலணிக் குழு தீர்மானித்துள்ளது. (ஐ 10)

### சுயதொழில் ஊக்குவிப்பு மீனவருக்கு வலைகள்

சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் சுளிபுரம், காட்டுப்புலம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களுக்கு சுழற்சி முறையிலான கடனடிப்படையில் மீன்பிடி வலைகள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் நிதி உதவி திட்டத்தின் கீழ் 4இலட்சத்து 10 ஆயிரத்து 904 ரூபாபெறுமதியான மீன்பிடி வலைகள் இவ்வாறு வழங்க படவுள்ளதாக வலி-மேற்கு பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட இந்த வலைகள் இங்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், தெரிவு செய்யப்பட்ட 5? மீனவ குடும்பங்களுக்கு இவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)

### கடற்றொழில் பல்கலைக்கழகம்

மீனவர்களின் பிள்ளைகளுக்கு மீன்பிடித்தொழில் தொடர்பான மேலதிக தொழில் நுட்பங்களைப் போதிக்கும் நோக்கில் கடற்றொழில் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்கு கடற்றொழில் நீரியல்வள அமைச்சு, கல்வி உயர்கல்வி அமைச்சுடன் இணைந்து நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான சட்ட விதிகளைத் தயாரிக்க குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் இவ்வாண்டு நடுப்பகுதியில் அது நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)

### பண்டத்தரிப்புச் சந்தையை புனரமைக்க ஐ.நா. உதவி

சண்டிலிப்பாய், ஜன 5

யுத்தகால அனர்த்தங்களின் போது பலத்த சேதமடைந்து தற்போது இயங்காத நிலையில் இருந்து வரும் பண்டத்தரிப்பு பொதுச் சந்தைக் கட்டடங்களை புனரமைப்புச் செய்வதற்கு உதவி வழங்க ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டப்பிரிவினர் (யூ என். டி. பி) முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப்பிரிவினர் பண்டத்தரிப்புக்கு வருகை தந்து சேதமடைந்த சந்தையை நேரில் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். இதன் புனரமைப்பு வேலைத் திட்டங்கள்தொடர்பாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர், வலி— தென்மேற்கு பிரதேசசபை விசேட ஆணையாளர் ஆகியோரினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையையும் இக்குழுவினர் பெற்றுச் சென்றுள்ளனர். (ஐ-135)


2000 ஆம் ஆண்டின்,
கலை, வர்த்தக மாணவர்களுடன்

**D. M. I.**

ஜனவரி 10 இல் கைகோர்க்கிறது.

**A\L 2000**

கலை, வர்த்தகப் பிரிவு ஆரம்பம்

கலை 8 மணி
வர்த்தகம் 10 மணி [பழைய நேரம்]

**D.M.I.**

233, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

- D. SAM

(சி/2552)



உங்கள் வாக்கு எங்களுக்கு! எங்கள் சேவை உங்களுக்கு!!

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)



X

[ஏ- 008]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிப்புறும் மாணவர் சுதந்திரம்

நுகர்வோரைப் பாதுகாக்க ''பாவனையாளர் பாது காப்புச்சட்டம்'' இருப்பது போல, இப்போது மாணவரையும் தனியார் கல்வி நிறுவனங்களின் பிடியிலிருந்து பாது காக்க நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது.

எத்தனை பேர் ஒரு வகுப்பில் படிக்கலாம்; எத்தனை மணித்தியாலங்கள் நடத்தும் விரிவுரைகளில் பாடத்திட்டம் பரீட்சைக்கு முன் நிறைவு செய்யப்படும் என்பன போன்ற கட்டுப்பாடுகளோ, திட்டங்களோ அற்று பணமே குறிக் கோளாக ஆட்டு மந்தைகளை அடைப்பது போல நான்கு அங்குல அகலம் கூடஇல்லாத பலகைகளின் மேல் இருக்க வைத்துப் படிப்பிக்கிறார்கள் பல ரியூட்டரிகளில்:

## வாசகர் திருமுகம்

இடம் பெயர்ந்து வந்து சாப்பாட்டுக்கே கஷ்டப்படும் எத்தனையோ மாணவர்கள், தாம் பலவீனம் கண்டுள்ள பாடத்தினை மாத்திரம் பணம் செலுத்திப்படிக்கலா மென்றால், அதுவும் முடியாது. நான்கு பாடத்திற்கும் பணத்தைக்கட்டிவிட்டு வேண்டுமானால் ஒருபாடத்தைப் படி என்கின்றனர்.

சில நிறுவனங்களிலுள்ள தன்னம்பிக்கையற்ற சில ஆசிரியர்கள் தங்களிடம் மாத்திரமே கல்விகற்க வேண்டும், வேறுயாரிடமாவது பயிலச் சென்றால் தமது நிறுவனத்திற்கு வரத்தேவையில்லை என்று மாணவர்களை மிரட்டுகிறார்கள். கொஞ்சம் குருபக்தி, விசுவாசம் உள்ள அப்பாவி மாணவர் களை குருபாவம் பொல்லாதது என்று பயங்காட்டுகின்றனர்.

மாணவர்களின் நலனைக்கருத்திற்கொண்டு செயற் படும் ஆசிரியனே ''குரு'' என்ற புனித ஸ்தானத்தை பெறத் தகுதியானவன். தனது வருமானம் கையை விட்டுப்போகிறதே என்ற பயத்தில் செயல்படுபவன் அல்லன்.

மாணவர்களோ தமது பாடத்திட்டத்தைப் பரீட் சைக்கு முதல் படித்து விளங்கிக்கொள்ள சாப்பாடும் இல் லாமல் ஒரு ''ரியூட்டறி''மாறி மற்றையதிற்கு பேயாய் அலைந்து கல்விகற்க முயல்கிறார்கள். சில பிரபலம் பெற்ற (சினிமா நடிகர் போன்று) ஆசிரியர்களை ''குரு என நம்பிச் செல்பவர்கள், அவர்கள் பல ரியூட்டறிகளுக்கு ''கோல் ஷீட்'' கொடுத்து விட்டுப் பாடத்திடட்த்தைப் பரீட்சைக்கு முதல் முடிக்கமுடியாமல் திண்டாடுவதும், பின்னர் 90 மைல் வேகத் தில் பாடத்திட்டத்தை முடித்து விட்டதாகக் காட்டும் சில அச்சிட்ட குறிப்புக்களையும் கொடுத்துச் சமாளிப்பதும் பரி தாபத்திற்குரிய விடயம்.

நடிகர் நாகேஷ் ஒரு படத்தில் தயாரிப்பாளராக வரும் ஒரு கட்டத்தில், ''நான் எடுத்தது தான் படம் இது பிடித் ததோ, பிடிக்க வில்லையோ பார்த்துத் தொலைக்க வேண்டி யது ரசிகர்களின் தலைவிதி'' என நகைச் சுவையாகக் கூறியது தான் இன்றைய மாணவனின் நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

(9 ஆம் பக்கம் பார்க்க)

# மின்னுகிறது மின்சாரம்!

யாழ்ப்பாண மக்களின் அடிப்படைத் தேவைகள் 60 சத வீதம் பூர்த்தியாக்கப்பட்டு விட்டது என நாடாளுமன் றத்தில் தமிழ் உறுப்பினர் ஒருவர் பேசியுள்ளார். மின்சாரம் வழங்கப்பட்டதைக் கொண்டு இவ்வாறான முடிவிற்கு அவர் வந்திருக்கலாம். ஆனால் மின்சாரம் யாழ்ப்பாணத்தில் படும் பாடுபற்றி அவர் நேரடியாகப் பார்த்தால் மூக்கின் மேல் விரலை வைக்க மாட்டார். மூர்ச்சித்து வீழ்ந்து விடுவார்.

'இன்டர் நெட்' உலகில் மக்கள் வாழ்ந்து கொண் டிருக்கிறார்கள் கொழும்பில் இன்று வெளிவரும் தினசரிப் பத்திரிகையை இன்று அதிகாலையிலேயே அமெரிக்காவில் உள்ளவர்கள் வாசித்து முடித்து விடுவர். சந்திரனுக்குச் சென்ற விஞ்ஞானம் செவ்வாய்க் கிரகத்தை தொட்டு விட் டது. சனிக்கிரகத்திற்கும் செல்லப் போகிறது. ஆனால் யாழ்ப்பாண மக்கள் எவருக்கும் இதுவரை ஒழுங்காக மின் சார விநியோகம் கிடைக்கவில்லை.

மின்சாரம் பல இடங்களுக்கு முற்றாகச் சென்றடைய வில்லை. அது ஒரு புறம். மறு புறத்தில் ''துணை இருந் தும் இல்லை' என்ற நிலை! மின்சாரம் இருந்தும் இல்லாத நிலை!

மின்சாரம் வருமா? வராதா?
தினசரி வீடுகளில் இதே பேச்சு!
அப்படி வந்தாலும் அப்பாடா! போச்சு பியூஸ்!
எங்கே? மின்கம்பத்தில்

இனி இன்றைக்கு வராது விளக்கைக் கொளுத் துங்கோ! பிறகு நெருப்புப்பெட்டி தேடும் வேலை தான்!

'சுமை கூடிவிட்டது எல்லோருக்கும் வழங்க வேண் டும். ஆதனால் ஒரு மணிநேர ''பவர்கட்'' என்கிறார்கள்- நியாயம்! ஏற்றுக் கொள்கிறோம்.

சரியாக 1 மணித்தியாலம் கழித்துத் தந்தால் பரவா யில்லை! சிலசமயம் 2, 3 மணிநேரம் கழித்து இரவு 10 மணிக்கு மேல் மின்சாரம் வருகிறது இதனால் யாருக்கு என்ன பயன்?

மேலும் சில இடங்களில் மிகவும் பிரகாசமாக வரும் மின்சாரம் சில இடங்களில் மின் விளக்கை அணைப்பதற்கு ''ஸ்விட்சை'' தேடுவதற்கு 'ரோச்லைட்'' பயன்படுத்த வேண்டிய நிலை!

குப்பிவிளக்கில் படித்துப் பல்கலைக்கழகம் சென்றவர் கள் எம்மவர்கள். இப்போது மின்சாரத்தைக் காட்டிக் கழிப் பதனால் கல்வி பாதிக்கப்படுகிறது. காலை 5 மணிக்கு படிக்க எழும்பும் பிள்ளைகள் 5.30 – க்கு மின்சாரம் நின்ற வுடன் திரும்பவும் நித்திரை கொள்கிறார்கள். விளக்கு என் றால் தொடர்ந்து படித்துக் கொண்டிருப்பார்கள் இரவு நேரங்களிலும் தினசரி இவ்வாறான தடை பாதிப்பை ஏற் படுத்துகிறது!

இலங்கை மின்சாரசபை - யாழ்ப்பாணம், பொறியிய லாளர்கள், முகாமிகள், தொழில் நுட்பவியலாளர்கள் தங் கள் சக்திக்கு அப்பாற்பட்டு கடுமையாக உழைக் கிறார்கள்; விசுவாசமாக வேலை செய்கிறார்கள். அனை வருக்கும் மின்சாரம் கிடைக்க வேண்டும் என நல்நோக்கத் துடன் பாடுபடுகிறார்கள். அவர்களது சக்திக்கு அப்பாற் பட்டு முழுமையான மின்சார விநியோகத்தை அவர் களால் வழங்க முடியவில்லை என்பது மறுப்பதற்கில்லை.

இந்நிலையில் எமது அடிப்படைத் தேவைகள் கணிச மான அளவு நிறைவேற்றப்பட்டுவிட்டது என்றால் அதற் புக்கணக்கு காரணம் மின்சாரத்தைப் பொறுத்தவரை தற் போது கிடைத்திருப்பது மினி மின்சாரமே!

சபா. தியாகராஜா
ஆனைப்பந்தி,

# உத்தேச அரசமைப்புத் திட்டத்தில் தமிழ்மொழிக்கு சம அந்தஸ்து

## அமைச்சர் பீரிஸ் சொல்கிறார்

கொழும்பு, ஜன. 5

இரு மொழிகளைப் பேசும் மக்கள் வாழும் ஒரு நாட்டில் இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்துவழங்கப்படவேண்டியது அவசியம். உத்தேச அரசியல தீர்வு யோசனைகளில் தமிழ்மொழிக்கு சம அந்தஸ்து வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

நீதி அரசியல் விவகார அமைச்சரும் பிரதி நிதி யமைச்சருமான பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் முன் கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்கா சர்வ தேச மாநாட்டு மண்டபத் தில் அரச கரும மொழித் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட மொழித்திறன் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு உரை யாற்றுகையில் கூறியதாவது:—

அரச திணைக்களத்திற்கு தமிழ்மொழியில் கடிதம் அனுப்பப்பட்டால் அதற்கு சிங்களமொழியில் பதில் அனுப்புவது தமிழ் மக்களின் மனதைப் புண்படுத்துவதாகவே அமையும். தமிழ் மொழியை உதாசீனம் செய்யக் கூடாது.

மொழிப் பிரச்சினையே இன்றைய இனப் பிரச்சினைக் கும், யுத்தத்திற்கும் அடி கோலியது. சிங்களமொழியை அரசகரும மொழியாக்கிய அன்றே தமிழ் மொழியையும் அரசகரும மொழியாக்கியிருந் தால் இன்றைய பிரச்சினைகள் தோன்றியிருக்க மாட்டா.

1956 ஆம் ஆண்டு சிங்கள மொழியை மாத்திரம் அரச கரும மொழியாக்கிய திலிருந்தே பிரச்சினைகள் தோன் றத் தொடங்கின. ஆரம்பத் திலேயே இப்பிரச்சினைகளுக் குத் தீர்வு கண்டிருக்க வேண் டும்.

கண்டி, கோட்டை இராச தானிகளின் போது சிங்கள இலக்கியத்திற்கு கணிசமான செல்வாக்கு செலுத்திய மொழிகளில் தமிழ்மொழியும் ஒன்றாகும். அதனால் நம் குறுகிய சிந்தனைகளிலிருந்து விடுபட்டு இந்த மொழிகள் மீது கருணையுடன் நோக்க வேண்டும்.

வெளிநாடுகள் பலவற்றி லும் இதே பிரச்சினை இருக் கத்தான் செய்கின்றது. தென் ஆபிரிக்காவில் நெல்சன் மண் டேலாவின் அரசமைப்பிலும் அந்நாட்டில் பேசப்படும் 11 மொழிகளுக்கு சம அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கிறது —என் றார். (ஐ-5)

# 3 ஆவது கஜபாகு படைப்பிரிவின் 12 ஆவது வருட விழா நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜன. 5

இலங்கை இராணுவத்தின் மூன்றாவது கஜபாகு படைப் பிரிவு தனது 12 ஆவது ஆண்டு நிறைவை கடந்த செவ்வா யன்று கொண்டாடியது. இதனை ஒட்டி மூன்றாவது கஜபாகு படைப்பிரிவினர் பல விசேட நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்திருந்தனர்.

இவற்றில் ஒரு நிகழ்வான சமாதான ஆராதனை மானிப் பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது.

மூன்றாவது கஜபாகு படைப் பிரிவின் கட்டளை அதிகாரி லெப்டினன்ட் கேணல் பி. வி. டி. யூ. பெரேரா மற்றும் படைப் பிரிவின் அதி காரிகள், இராணுவத்தினர், பிரதேச மக்கள் ஆகியோர் அதில் கலந்து கொண்டதாக யாழ்ப்பாண இராணுவத் தலைமையகம் விடுத்த செய் திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. (ஐ)

## கொழும்பில் பணிபுரியும்

# இந்தியப் பத்திரிகையாளர் வீட்டில் திடீர் சோதனை

கொழும்பு, ஜன. 5

இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் இலங்கை செய்தியாளராகப் பணியாற்றும் நிருபமா சுப்பிர மணியன் என்ற பெண் பத்திரிகையாளரின் ரோஸ் மீட் பிளேஸ் இல்லத்தில் நேற்று முன்தினம் மாலை 3.30 மணியளவில் இராணுவத்தினர் திடீர் சோதனை நடத்தியுள்ளனர்.

இது அவரது இல்லத்தில் நடத்தப்பட்ட இரண் டாவது சோதனை நடவடிக்கை ஆகும்.

இச் சம்பவம் குறித்து நிருபமா சுப்பிரமணியன் தெரிவித்திருப்பதாவது:-

மாலை சுமார்3.30 மணியளவில் 12 ஆயுதந்தரித்த இராணுவத்தினர் ஒரு குழுவாக வந்து எனது வீட்டை சோதனையிட்டனர். வீடு முழுவதும் சோதனை நடத் திய அவர்கள் என்னிடம் துருவித் துருவிக் கேள்விக ளும் கேட்டனர்.

எவ்வளவு காலம் இந்த நாட்டில் வசிக்கிறீர்கள்? எப்பொழுது முதல் இந்த வீட்டில் வசிக்கிறீர்கள்? என்ற கேள்விகளையெல்லாம் எழுப்பினர்.

அது மட்டுமல்லாமல் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள மட்டக்களப்பு, கொக்கட்டிச் சோலை போன்ற பகுதிகளுக்கு நான் சென்று வந்தது குறித்தும் அவர்கள் விவரம் கேட்டனர். எல்.ரி.ரி.ஈ யினர் குறித்தும் அவர்கள் கேட்டனர்.

இராணுவத்தினரின் நடவடிக்கைகள் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? எனக் கேட்டதற்கு பதில ளித்த அவர் ''இது குறித்து என்னால் எந்தவொரு கருத்தையும் கூறமுடியாது. ஏனெனில் நான் ஒரு வெளிநாட்டுப் பத்திரிகையாளர் தானே'' என்றார்.

(ஐ-10)

# கிணற்றுக்கு சிறுமி பலி

நெல்லியடி, ஜன. 5

சிறுமி ஒருத்தி தவறுதலாக கிணற்றினுள் வீழ்ந்து பரி தாபமாக மரணமானார்.

கரவெட்டி மத்தொனியி லுள்ள வெல்லன் வீதியில் இச் சம்பவம் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த உதயகுமார் கீர்த்தனா (வயது 7) என்னும் சிறுமியே மரண மானவராவார். (ஐ-109)

# மீன்விலை வீழ்ச்சி

சாவகச்சேரி, ஜன 5

சாவகச்சேரி மீன் சந்தை யில் மீனின் விலை வீழ்ச்சி யடைந்துள்ளது. கடந்த சனி யன்று ஒரு கிலோ மீன் 100 ரூபாவாக விற்கப்பட்டது. அன்றைய தினம் தீவுப் பகுதி யில் இருந்து மீன் விற்ப னைக்கு வந்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-31)

# மயானத்தில் கொட்டகை

மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் 80 ஆயிரம் ரூபா செலவில் தகரக் கொட்டகை ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் 1997 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப் படையிலான நிதி ஒதுக்கீட் [illegible] நிதி ஒதுக்கப்பட்டு [illegible] வலி. [illegible] மேற்கு பிரதேச சபை நிர்வாகம் இவ்வேலைத் திட்டத்தை நிறைவேற்றியுள்

# விமானச்சீட்டு பெறுவதில் தரகர்கள் தொல்லை

## தடுக்க பொலீஸார் நடவடிக்கை

கொழும்பு, ஜன. 5

பம்பலப்பிட்டியில் உள்ள 'லயன் எயர்' விமானப் பய ணச் சீட்டு பெறும் அலுவல கத்தின் முன்பாக கடந்த மூன்று நாள்களாக பொலீ ஸார் கடமையில் ஈடுபடுத் தப்பட்டுள்ளனர் என கொழும்புச்செய்திகள் தெரி வித்தன.

பொது மக்களிடம் விமா னச் சீட்டு பெற்றுத்தருவதா கக் கூறி பணம் பறிக்கும் தரகர்களின் தொல்லையில் இருந்து மக்களைப் பாதுகாக் கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பண மோசடி நடவடிக்கையில் ஈடுபட்ட தரகர்கள் சிலர் பொலீஸா ரால் விசாரணைக்குட்படுத் தப்பட்டனர். (ஐ)

# கிராம அபிவிருத்திச் சங்கம் வழங்கும் புலமைப் பரிசில்

தென்மராட்சி, ஜன 5

மீசாலை வடக்கு இராமா வில் கிராமிய அபிவிருத்திச் சங்கத்தினர் மீசாலை வீரசிங் கம் மகாவித்தியாலயத்தில் இருந்து ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்றுப் பல்கலைக்கழகம் செல்லும் மாணவருக்கு வழங்கவெனப் புலமைப் பரி சில் நிதியம் ஒன்றை ஆரம் பித்துள்ளனர்.

இவ்வருடம் ஆரம்பிக்கப் பட்ட இந்தப் புலமைப்பரிசில் களில் மேலும் பல மாணவர் களுக்கு வழங்கப்படவுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேசத் தில் கிராமிய அபிவிருத்திச் சங்கம் ஒன்றினால் புலமைப் பரிசில் திட்டம் வழங்கப்படு வது இதுவே முதல் தடவை யாகும்.

புலமைப் பரிசில் நிதி வங்கி ஒன்றில் வைப்பிலிடப்பட்டு அதற்கான பத்திரம் வித்தி யாலய அதிபரிடம் கையளிக் கப்படும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தேவை

எமது சங்கத்தில் மா அரைக்கும் ஆலையில் கடமையாற்றக் கூடிய தற்காலிக தொழிலாளி ஒருவர் தேவை. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்தை 13-01-98 ஆம் திகதிக்குப் பிந்தாது பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் என்ற விலாசத்திற்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

**விண்ணப்பதாரர்**

வயது:- 01. 01. 98 இல் 25 வயதிற்கு குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

கல்வித்தகைமை: ஆகக் குறைந்தது 8 ஆம் வகுப்பில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அனுபவம்:- மா அரைக்கும் ஆலையில் அரைக்கும் தொழில், மா ஆலை இயந்திரம் இயக்குதல், அரைக்கும் இயந்திரம் பராமரித்தல், உதிரிப்பாகங்கள் மாற்றுதல் செவ்வனே ஓர் ஆலையை இயக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

வேதனம்:- வேதனம் நேர்முகப்பரீட்சையின் போது பேசித் தீர்மானிக்கப்படும்,

பொது முகாமையாளர்

(சி/2548)

**மீண்டும் யாழ். நகரில்!**

பொருளியல் வரதராஜன்!!

வகுப்புக்கள் விரைவில் ஆரம்பம்!!!

வெளி வந்துவிட்டது.

வரவு செலவுத் திட்டம்

வினா - விடை

தொடர்புகளுக்கு:-

**பொருளியல் கல்வி நிலையம்**

200, பிரதான வீதி, சுண்டுக்குளி.

[52291]

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பலாலி தெற்கு - வயாவிளான்
ஒய்வுபெற்ற கிராமசேவையாளர்

**அமரர் செ. உலகநாதன் J. P.**

தோற்றம்: 1928 — 06 — 05
மறைவு: 1995 — 01 — 09

நிறைமனச் செல்வராக
நிறைவான வாழ்வு உகந்து
இறைவனின் திருவடிக்கீழ்
இருக்கின்ற தலைவா உங்கள்
நிறைவான பணிகள் போற்றி
நித்தமும் தொழுகின்றோம் நாம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சுற்றத்தார்.

'தேவிவாசா', தியேட்டர் வீதி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

(49900)

## வன்னியிலிருந்து 16 பேர் வருகை

குருநகர், ஜன. 5

புதுதாண்டு தினமான கடந்த முதலாம் திகதி வன்னியிலிருந்து குடாக்கடல் ஊடாக 16 பேர் குருநகர் வந்து சேர்ந்தனர்.

இதில் குருநகரைச் சேர்ந்த 11 பேரும் சாவகச்சேரியைச் சேர்ந்த 5 பேரும் அடங்குவர். (ஐ-51-5)

## வகுப்புகள் ஆரம்பம்

குருநகர், ஜன. 5

பிரான்ஸில் வசிக்கும் குருநகர் வாசிகளின் உதவியுடன் குருநகர் சிறார்களின் கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கில் குருநகர் கல்விக் கழகத்தினால் நடாத்தப்படும் கல்வி வகுப்புக்கள் மீண்டும் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட உள்ளன.

குருநகரின் கல்வி அபிவிருத்திக்காக சுவிற்சர்லாந்தில் வசிக்கும் குருநகர் வாசிகளும் உதவ முன்வந்துள்ளார்கள். (ஐ-51)

## நிவாரண உணவு விநியோகம்

சாவகச்சேரி பிரதேசத்தில் தங்கியுள்ள இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரண முத்திரையின் 58ஏ, 58பி, 59ஏ, 59பி ஆகிய நான்கு புள்ளிகளுக்கான உலர் உணவுப் பொருள்கள் ப.நோ.கூ.சங்க கிளைக்கடைகளில் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நிவாரண உலர் உணவுப் பொருள்களை இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு தென்மராட்சி பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இதேவேளை சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 1, 9, 11, 19, 23 ஆகிய இலக்கக் கிளைக் கடைகளில் நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டு வருவதாக சங்க பொது முகாமையாளர் சி. சிவபாலசுப்பிரமணியம் தெரிவித்தார். (ஐ-117)

## பம்பாய் வெங்காயம் முளைக்கவில்லை

செம்பியன்பற்று, ஜன. 5

வட மராட்சி கிழக்கில் உள்ள செம்பியன்பற்றுப் பகுதியில் கடந்த நவம்பரில் விதைக்கப்பட்ட பம்பாய் வெங்காயம் இன்னும் முளைக்கவில்லை.

அதிக பணம் கொடுத்து விதைவெங்காயத்தை வாங்கி நட்டும் பயன் ஏதும் ஏற்படாமல் நட்டமே ஏற்பட்டுள்ளதாக செம்பியன்பற்று கமக்கார அமைப்பின் தலைவர் தெரிவித்தார்.

## ஆலயத்துக்கு பொதுமக்கள் செல்ல அனுமதி

கொல்லங்கலட்டி பிள்ளையார் ஆலயத்திற்கு பொதுமக்கள் செல்வதற்கு நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த சில மாதங்களாக இவ்வாலயத்திற்கு ஆலயப் பூசகர் மட்டும் சென்று பூசை செய்து வர அனுமதிக்கப்பட்டிருந்தார்.

ஆனால் நேற்று முன்தினம் திருவெம்பாவையை ஒட்டி நடந்தபூசைக்குச்செல்வதற்கு பொதுமக்களும் அனுமதிக்கப்பட்டனர். சுமார் ஐம்பது பொதுமக்கள் வரை பூசையில் கலந்து கொண்டனர்.

(ஐ-36)

## திருத்தம்

உதயன் 1 — 1 — 1998 புத்தாண்டுச் சிறப்பு மலரில் வெளியான மேசியா நகை மாடம் நிறுவனத்தின் விளம்பரத்தில் —

''புதுவருட வாழ்த்துக்கள்'' என்பதற்குப் பதிலாக ''21 [illegible]'' என்று தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. அதனைத் திருத்தி வாசிக்கவும்.

## கடற் கொந்தளிப்பால் மீன்பிடி பெரும் பாதிப்பு

வடமராட்சி கிழக்குப்பகுதியில் கடற் கொந்தளிப்பால் கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் மீனின் விலையும் உயர்ந்துள்ளது.

வடமராட்சி கிழக்குப்பகுதியில் உள்ள குடத்தனை நாகர் கோயில், மாமுனை, தாளையடிப் பகுதிகளில் உள்ள மீனவர்கள் கடற் கொந்தளிப்பு காரணமாக தொழிலுக்கு செல்வதில்லை. இதனால் இப்பகுதியில் முன்னர் 110 ரூபா விற்ற ஒரு கிலோ மீன் தற்போது 180 ரூபாவிற்கு விற்கப்படுகிறது. (ஐ-36)

## கலாலயா பயிற்சியகம்

யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

**டிப்ளோமா**

**மனைப்பொருளியலும் கைத்திறனும்**

- ★ கேக் ஐஸிங்
- ★ உணவு தயாரித்தல்
- ★ உடை தயாரித்தல்
- ★ பூ வேலை
- ★ கைவேலை

❖ மேற்படி டிப்ளோமா பயிற்சிகள் பயில்வோருக்கு இலவசமாக கூந்தல் அலங்காரம், முக ஒப்பனை (Make up), கோலம் என்பன பயிற்றுவிக்கப்படும்.

| | |
|---|---|
| சனி, ஞாயிறுபிரிவு ஆரமபம | 18.01.98 |
| கிழமை நாள் பிரிவு ஆரம்பம் | 19.01.98 |

❖ மேலும் விவரங்களுக்கு தினசரி காலை 9.00 முதல் பி.ப.1.30 வரை நேரில் தொடர்பு கொள்ளவும்.

- இயக்குநர்

(சி/2545)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி சிவக்கொழுந்து இராசதுரை**

பிறப்பு: 1935 — 06 — 23
இறப்பு: 1996 — 12 — 18

திதி: 05 - 01 - 1998

ஆனியில் வந்துதித்த
ஆரணங்கே ரத்தினமே!
மார்கழியில் சென்றனையோ?
நித்திரையை நாம் மறந்தோம்.
பத்திரமாய் நீயும் இன்று
பரமனுடன் கலந்தனையோ?
முத்திரையாய் நீயுதிர்த்த
முத்துக்கள் தான் கலங்க
பற்றி உனைப்படர்ந்த
பத்தாவும் பரிதவிக்க
உடன் பிறப்புக்களும், உற்ற உறவினரும்
உனைப்பிரிந்த துயரமதை
ஓராண்டு காலமாய் தானொன்று கூடி
தாபத்தைத் தீர்க்க எண்ணித்
தவிக்கின்ற தவிப் பென்றும்
தீராது தீராது தாயே!
உன் துயரம் ஆறாது அம்மா!

கணவர்: செ. இராசதுரை
பிள்ளைகள்: றதி, றஞ்சி, லவன்.

இந்துக் கல்லூரி வீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

(சி/2536)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகருக்கு பஸ் சேவை ஆரம்பிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 5

வெகுவிரைவில் காரைநகருக்கான நேரடி பஸ் சேவையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் யாழ். பிராந்திய முகாமையாளர் எஸ். சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் தற்சமயம் 27பாதைகளில் 42பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. காரைநகர், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் மட்டும் எமது சேவை நடைபெறவில்லை. வெகுவிரைவில் காரைநகருக்கான பஸ் சேவையை மீண்டும் இயங்க வைக்க முயற்சிகள் எடுத்துவருகின்றோம். விரைவில் அது சாத்தியமாகும் என நம்புகின்றோம். இந்தச் சேவையை ஆரம்பிக்க வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். அவர்களது தேவையை நிறைவு செய்ய வேண்டும் என்ற நோக்கிலேயே நாம் முயற்சிகள் எடுத்து வருகின்றோம் என்றும் அவர் சொன்னார்.

(ஐ-9)

# தொழில் வங்கியில் 23 ஆயிரம் பேர் பதிவு

யாழ். மாவட்டத்தில் 22 ஆயிரத்து 928 பேர் தொழில் வங்கியில் தம்மைப் பதிவு செய்துள்ளனர். இவர்களில் ஜீ.சீ.ஈ. உயர்தரம் சித்தி பெற்ற 12 ஆயிரம்பேரும், ஜீ.சீ.ஈ. சாதாரணதரம் சித்திபெற்ற 10 ஆயிரம் பேரும் 600 பட்டதாரிகளும் அடங்குவர்.

இதேவேளை யாழ். மாவட்டத்தில் ஒவ்வொரு வருடமும் 5 ஆயிரம் பேர் பாடசாலையைவிட்டு வெளியேறுகிறார்கள் என்று அண்மையில் எடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

(ஐ-5)

# வடமராட்சி கிழக்கில் தபாற் பெட்டிகள் இல்லை

செம்பியன்பற்று, ஜன. 5

வடமராட்சிக் கிழக்குப் பகுதியில் பல இடங்களில் தபாற் பெட்டிகள் இல்லை, இதனால் இப்பகுதி மக்கள் தமது கடிதங்களை தபாலில் சேர்ப்பதற்கு பெரிதும் சிரமப்படுகின்றனர்,

குறிப்பாக மாமுனை செம்பியன்பற்று தெற்கு, நெல்லியான்பகுதிகளில் வைக்கப்பட்டிருந்த தபாற் பெட்டிகள் காணாமற் போய்விட்டன. தபாற் பெட்டிகள் மீளவும் வைக்கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி பனை தபால் அதிபருக்கு மாமுனை சமூக பொருளாதார அமைப்பு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது. (ஐ-36)


## வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
## (சுழிபுரம்,சங்கானை, வட்டுக்கோட்டை, அராலி உப - அலுவலகம்)

## ஆதனவரி அறிவித்தல்

1998 ஆம் ஆண்டுக்கான ஆதன வரியை 1998-01-31 ஆம் திகதிக்கு முன்னர் முழுமையாகச் செலுத்துவோருக்கு 1998 மொத்த வரியின் 10% கழிவு வழங்கப்படும் ஒவ்வொரு காலாண்டுக்குரிய வரியை சம்பந்தப்பட்டகாலாண்டின் முதல் மாத முடிவுக்குள் செலுத்துவோருக்குக் காலாண்டுக்கான வரியின் 5% கழிவு வழங்கப்படும்.

1 ஆவது காலாண்டு, 2 ஆவது காலாண்டு, 3 ஆவது காலாண்டு, 4 ஆவது காலாண்டு வரியை முறையே 1998-03-31, 1998-06-30, 1998-09-30, 1998-12-31 ஆம் திகதிக்குள் செலுத்தத் தவறினால் வதிப்பிடங்களுக்கும், வெற்றுக் காணிகளுக்கும் 15%மும், ஏனைய ஆதனங்களுக்கு 20%மும் பற்றாணைக் கட்டணமாக வரியுடன் சேர்த்துச் செலுத்த வேண்டும்.

1997 ஆம் ஆண்டு முடிவு வரையான வரி நிலுவையைச் செலுத்திய பின்பே 1998 ஆம் ஆண்டுக்கான வரி ஏற்றுக்கொள்ளப்படும். வரியைச் செலுத்திச் சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பு;-

1. சேதமடைந்தும், காலியாகவுள்ளதுமான ஆதனங்களுக்கான வரி குறைப்பு விண்ணப்பங்களை 1998-01-31 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சமர்ப்பிக்க வேண்டும்.
2. ஆதன உரிமை மாற்றத்திற்கான படிவங்களை உப அலுவலகங்களில் பெற்றுப் பூர்த்தி செய்து அவ்வுப அலுவலகங்களிலே சமர்ப்பிக்க வேண்டும்.
3. வரி மாற்றம் இருப்பின் அறிவித்தல் பத்திரம் விநியோகிக்கப்படும்.
4. கட்டட அமைப்புகள் (திருத்தங்கள் உட்பட) சுற்றுமதில் கட்டுதல் ஆகியன இச் சபையின் அனுமதியின்றி அமைப்பது நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். விண்ணப்பப் பத்திரங்களை உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

கா. சந்திரராசா,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

வலிகாமம் மேற்கு,
பிரதேச சபைத் தலைமை அலுவலகம்.
சுழிபுரம்,
1997 – 12 – 29 (சி–2539)


# தொழில் சட்டங்கள் பேணுவதை கண்காணிக்க திடீர்ப் பரிசோதனை

திருநெல்வேலி, ஜன.5

யாழ். மாவட்டத்தில் தொழில் சட்டங்கள் சரிவர நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிப்பதற்கு யாழ். தொழில் திணைக்கள அதிகாரிகள் விரைவில் வர்த்தக நிலையங்களிலும், கைத்தொழில் நிலையங்களிலும் திடீர் பரிசோதனைகளை நடத்தவுள்ளனர்.

கொழும்பிலுள்ள தொழில் அமைச்சினால் விடுக்கப்பட்ட பணிப்புரைக்கு இணங்க இந்தத்திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொழில் சட்டங்களை சரிவர நடைமுறைப்படுத்தாமல் இருக்கும் நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று யாழ். மாவட்ட உதவி தொழில் ஆணையாளர் ஆ. பசுபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் தொழில் சட்டங்களை சரிவர அமுல் நடத்துவது தொடர்பாக அந்தந்த பிரிவிலுள்ள வர்த்தக நிலையங்களினதும், தொழில் நிறுவனங்களினதும் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல்களை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதன் முதற்கட்டமாக யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட வர்த்தக நிறுவனங்கள், தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் கடந்த டிசம்பர்மாதம் 26ஆம் திகதியன்று யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

## விவசாயிகள் கலந்துரையாடல்

தென்மராட்சி, ஜன. 4

சாவகச்சேரியிலிருந்து தனங்கிளப்பு ஊடாக மறவன்புலோ, நாவற்குழி வரையிலான வீதியின் மருங்கில் 50 மீற்றர் தூரத்தில் நெற்செய்கை பண்ணும் வயல் உரிமையாளர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தனங்கிளப்பு கிராம அலுவலர் பணிமனையில் நடைபெறவுள்ளதாக மறவன்புலோ விவசாயிகள் சம்மேளனத் தலைவர் மா. லீலாவினோதன் அறிவித்துள்ளார். (ஐ-117)

சுதந்திர தினத்தன்று:

# கிளிநொச்சியில் இருந்து கண்டிக்கு முதல் பஸ்!

## அரசு இரகசியத் திட்டமாம்

கொழும்பு, ஜன. 5

எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன்னர் வவுனியா — கிளிநொச்சி தரைவழிப் பாதையைத் திறக்குமாறு அரசாங்கம் படையினரைப் பணித்துள்ளது

கிளிநொச்சியில் இருந்து பிரயாணிகள் பஸ் ஒன்றை வரவழைத்து பெப்ரவரி 4 ஆம் திகதியன்று கண்டியில் நடைபெறும் சுதந்திர தினக் கொண்டாட்ட வைபவத்தின் போது அந்த பஸ்ஸை வரவேற்பது என அரசு ரகசியமாக திட்டமிட்டுள்ளதாலேயே குறித்த திகதிக்கு முன்னர் தரைவழிப்பாதையைக் கைப்பற்ற வேண்டும் என உத்தரவிட்டுள்ளதாக 'யுக்திய'' சிங்கள வார இதழ் தெரிவித்துள்ளது.

சுதந்திர தின விழாவின்போது அந்த பஸ்ஸை வரவேற்கும் நிகழ்ச்சிக்கு அதி முன்னுரிமை அளிக்கப்படவுள்ளதால் அரசு அதற்கான முயற்சிகள் வெற்றி பெற சகலவிதத்திலும் முயன்றுவருவதாகவும் ஆனால் தரைவழிப் பாதையைக் கைப்பற்றும் குறித்த இலக்கை அடைய படையினருக்கு, ஆளணிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (ஐ-10)

போராட்டச் சூழ்நிலை மட்டுமன்றி

# யாழ். கல்வித்தர வீழ்ச்சிக்கு வேறுபல காரணங்களும் உள

## பரிசளிப்பு விழாவில் விஞ்ஞான பீடாதிபதி

வலிகாமம் தெற்கு, ஜன. 5

யாழ்ப்பாண மக்கள் கல்விக்கு எக்காலத்திலும் முக்கியத்துவம் கொடுத்தே வந்துள்ளார்கள். அண்மைக் காலங்களில் எமது பிரதேசங்களில் கல்வியில் வீழ்ச்சி நிலை காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. போராட்ட சூழ்நிலையே இதற்கு காரணமாக கூறப்படினும் கல்வித்தர வீழ்ச்சிக்கு வேறு பல காரணங்களும் உண்டென உணர்ந்திட வேண்டும்.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேருரையாற்றிய யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதியும் கல்லூரியின் பழைய மாணவருமாகிய பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி கல்லூரி அரங்கில் அதிபர் க. சிவாஜி தலைமையில் விழா நடைபெற்றது.

பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் அங்கு உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:-

பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றமை ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கை என பாராட்டப்பட்டாலும அதுவே கல்வித்தர வீழ்ச்சிக்கு விழுந்த முதல் அடியாகும்.

உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளாக இருந்த போது முகாமையாளர்களும் அதிபர்களும் இணைந்து [illegible] நியமித்தனர். தமது பணத் [illegible] மக்களின் உதவியுடனும் தேவையான சகல வளங்களையும் பாடசாலைக்கு பெற்றுக் கொடுத்தனர். விஞ்ஞான பட்டதாரிகள் குறைவாக இருந்த காலத்தில் வெளிநாடுகளில் இருந்து — குறிப்பாக இந்தியாவில் இருந்து — வரவழைத்து கல்வி நிலையை உயர்தரத் தில் வைத்துப் பேணினர்.

பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றபின் அரசியலவாதிகளின் தலையீட்டால் கல்வித்துறையில் ஏற்பட்ட சீரழிவுகள் பல. ஒவ்வொரு அரசாங்கமும் தனது கொள்கைக்கேற்ற புதுப் புதுத் திட்டங்களை ஏற்படுத்தின.

### கல்வியில் அரசியல்

ஒருநாட்டின் கல்விக் கொள்கையை கல்வியாளர்கள், அதிபர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள் கொண்ட குழுவே வகுப்பது சிறந்தது. இத்திட்டத்துக்கமைய ஒரு மாணவன் முன்னரை விட இப்போது அதிக புள்ளியைப் பெற வேண்டி உள்ளது.

தரப்படுத்தல் என்பது கல்வியின் வீழ்ச்சிக்கான இன்னொரு காரணம், பின்தங்கிய பகுதிப் பிள்ளைகளுக்கு உதவி தேவையானது தான்; ஆனால் கல்வித்தரம் என்பதை பார்க்கும் போது தரப்படுத்தல் முறையால் வீழ்ச்சியே தோன்றும்.

வசதியான வீடோ, திருப்தியான உணவோ நமக்கு கிடைக்காது போகலாம். ஆனால் எந்த நிலையிலும் நாம் கல்வியைக் கைவிடக் கூடாது. கல்விக்காக செலவிடப்படும் பணமே ஒரு நாட்டின் சிறந்த முதலீடாகும். பொருளாதார முன்னேற்றத்துக்கு கல்வியே அவசியமானது. ஆனால் எமது நாட்டில் இவை சரியான முறையில் நடைபெறுவதாகக் கூற முடியாது.

அரசியல் லாபமும், தேர்தல் வெற்றியும் கல்விக் கொள்கையை வகுப்பதில் முக்கிய பங்கினை வகிக்கின்றன.

21 ஆம் நூற்றாண்டுக்கான கல்வித்திட்டத்தை தற்போது அரசு உருவாக்கி வருவதாகக் கூறப்படுகிறது. இதில் மாணவருக்கு நன்மையான பல அம்சங்கள் உண்டெனவும் கூறப்படுகிறது.

க. பொ. த உயர்தரத்தில் நான்கு பாடங்களுக்கு பதிலாக மூன்று பாடங்கள் படித்தால் போதுமானது என்ற திட்டம் மாணவர்களுக்கு தீங்கையே விளைவிக்கக் கூடியது. பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்காக அவர்களின் நல்வாழ்வுக்காக செலவிடும் பணத்தை கல்வியின் பொருட்டு செலவிட்டால் அது அவர்களுக்கு சிறப்பான வாழ்க்கையைத் தேடிக் கொடுக்கும்— என்று சொன்னார்.

துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தமது ஆசியுரையில்—

ஸ்கந்தாவில் இன்று நடைபெறும் நிகழ்ச்சி, மாணவர்களின் ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றை அவதானிக்கும் போது கல்லூரி அதிபர் சிவாஜியின் சிறப்பான ஆளுமை, நிர்வாகத்திறன் ஆகியவற்றைக் காண முடிகிறது. மிகவிரைவில் அவரது தலைமையில் ஸ்கந்தா தனது பழைய நிலையைத் தொட்டு நிற்கும் என்று நம்பலாம் —என்றார்.

உடுவில் கோட்ட கல்வி அதிகாரி அ. தற்பரானந்தன் நிறுவுநர் நினைவுப் பேருரையாற்றினார். கல்லூரி மாணவர்களின் இயல், இசை, நாடக நிகழ்வுகளும் இடம்பெற்றன. (அ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## யாழ். நூல் நிலைய மீளமைப்பு

யாழ்ப்பாணம் நூலகத்தை மீளக் கட்டுவதற்கு — திருத்தியமைப்பதற்கு — நன்கொடைகளை வழங்குமாறு ஜனாதிபதி பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

நூலகத்தைத் திருத்துவதற்கு இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் நிதி திரட்டப்படவுள்ளது. நிதி திரட்டுவதற்கென இரு அமைச்சர்களின் தலைமையில் குழு ஒன்றையும் உருவாக்க முடிவாகியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலிருந்தபோது சட்டத்தின் காவலர்களாலேயே அறிவுக் களஞ்சியமான யாழ்ப்பாணப் பொது நூல் நிலையம் எரிக்கப்பட்டது. அதனை மீள அமைத்துத் தமிழர் நலன்களில் அக்கறையுடையவர் என்பதனைக்காட்ட வேண்டும் என்ற ஆர்வம் ஜனாதிபதியிடம் இருப்பது புலப்படுகிறது.

வெண்தாமரை அமைப்பின் மூலமாக தென்னிலங்கையில் ஒரு செங்கல்லும், ஒரு நூலும் அன்பளிப்புச் செய்யக் கோரும் இயக்கத்தை இப்போதைய அரசு ஏற்கவே ஆரம்பித்துள்ளது.

இது ஐக்கிய தேசியக்கட்சி அரசு தமிழர்களுக்குச் செய்த அநியாயங்களில் ஒன்றுக்குத் தாம் பிராயச்சித்தம் செய்வதாகக்காட்டும் உத்தியாகவும் அமைகிறது.

அதாவது பல அரசியல் சுகலாபங்களையும், நல்ல பெயர் தேடுதலையும் யாழ்ப்பாணம் பொது நூலக மீளமைப்பின் மீதான அக்கறை மூலம் காட்ட அரசு உழைக்கிறது.

தென்னாசியாவிலேயே மிகப் பெரிய நூல் நிலையமாக, தேடற்கரிய நூல்கள், ஆவணங்கள் என்பனவற்றைக் கொண்டு விளங்கியது. யாழ்ப்பாணப் பொது நூல் நிலையம் தமிழர்களின் அறிவுத் தேடலின் சின்னமாகவும், பல சந்ததிகளுக்கு அறிவூட்டக் கூடிய பெரும் நூற் கூடமாகவும் அது விளங்கியது. அது திட்டமிட்டு எரிக்கப்பட்டதால் உண்டான இழப்பு எழுத்துக்களில் அடக்கப்பட முடியாதது.

ஆகையால் அதனை மீள அமைக்க எடுக்கப்படும் முயற்சிகள் வரவேற்கப்படக்கூடியவை. ''யார் குற்றினாலும் அரிசியானால் சரி'' என்ற வகையில் அரசாங்கத்தின் அக்கறையை யாழ். மக்கள் வரவேற்கவே செய்வர்.

ஆனால் யாழ். நூல் நிலையத்தை மீள அமைப்பதனை தமிழர்களுக்குச் செய்யப்படும் உதவியாகவோ, சலுகையாகவோ அரசு கருதக் கூடாது. அரசாங்கத்தின் கடமை அது.

முறையின் படி, நூல் நிலையம் எரிக்கப்பட்டதற்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும். 1981 பொலிஸ் வன் செயல் குறித்து விசாரணை செய்த லயனல் பெர்ணாண்டோ விசாரணைக் குழு அவ்வேளை அழிக்கப்பட்ட பல நிறுவனங்களுக்கு நட்டஈடு வழங்கச் சிபார்சு செய்திருந்தது. அந்த வகையில் நூல் நிலைய அழிப்புக்கு நட்ட ஈடாக ஒரு கோடி 20 லட்சரூபா வழங்குமாறு பரிந்துரைத்திருந்தது.

இது வரை அந்த நட்ட ஈட்டுப் பணம் வழங்கப்படவில்லை; அண்மையில் ஜனாதிபதி நிதியிலிருந்து 30 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதனை நட்ட ஈடாகக் கருதமுடியாது; ஒரு வகை நிவாரணமே.

லயனல் பெர்ணாண்டோ குழு சிபார்சு செய்த நட்ட ஈட்டுத் தொகையை யாழ். மாநகர சபைக்கு வழங்கினால், அதுவே நூல் நிலையத்தை புனரமைக்கவும், புனரமைப்புப் பணிகளை அந்த நிதியைக்கொண்டு தொடங்கினால் மேற்கொண்டு தேவைப்படும் நிதியை அரசு சேகரித்துக் கொடுக்கலாம்.

புனரமைப்புக் குழு யாழ்ப்பாணத்திலேயே இயங்கவேண்டும். உறுப்பினர்கள் அரசியல் சார்பற்ற சுயேச்சையான பெருமக்களாக இருக்க வேண்டும். அக்குழுவுக்கு அரசு தேவையான உதவிகளைச் செய்யலாம்.

# பல கோடி ரூபாவை லயன் எயருக்கு வாடகையாகசெலுத்தும் அதிகாரிகள்

கொழும்பு, ஜன. 5

வடபகுதிக்கான போக்குவரத்துக்கு விமானப் படையினரால் பயன்படுத்தப்பட்டுத் தற்போது திருத்த வேலைகளுக்காகக் காத்திருக்கும் ஏ. என். 32 ரக விமானத்தைத் திருத்துவதற்கான செலவான 6கோடி ரூபாவை அனுமதிக்கத் தொடர்ந்து மறுத்து வரும் பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகள் ''லயன் எயர்'' நிறுவனத்துக்குச் சொந்தமான விமானங்களை வாடகைக்கு அமர்த்துவதில் அக்கறையாக உள்ளனர் என 'யுக்திய' சிங்கள வார இதழ் தெரிவிக்கிறது.

''லயன் எயர்'' நிறுவனத்துக்கு வாடகையாக மாதாந்தம் சுமார் இரண்டரைக் கோடி ரூபாவை வழங்கும் இந்த அதிகாரிகள் விமானப்படைக்குச் சொந்தமான விமானத்தைத் திருத்துவதற்குத் தேவையான நிதியை வழங்கத் தொடர்ந்து அனுமதி மறுத்து வருகின்றனர்.

''லயன் எயர்'' நிறுவனத்துக்கு நாளாந்தம் சுமார் 8 லட்சத்து 46 ஆயிரம் ரூபா வாடகையாகச் செலுத்தப்படுகிறது. பல மாதங்களாக வாடகை நிலுவையாக இருந்த 80 கோடி ரூபாவில் 70 கோடி ரூபா கடந்த டிசம்பர் மாதம் வழங்கப்பட்டுள்ளது.

6 கோடி ரூபாவை மட்டுமே செலவு செய்து விமானத்தைத் திருத்தி பயன்படுத்த விரும்பாத அதிகாரிகள் பல கோடி ரூபாவை ''லயன் எயர்'' நிறுவனத்துக்கு வாடகையாகச் செலுத்தத் தயாராய் இருப்பதற்கு பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த குறித்த சில அதிகாரிகள் ''லயன் எயர்'' நிறுவனத்திடமிருந்து கையூட்டுகளைப் பெறுவதே காரணம் என அந்தப் பத்திரிகை மேலும் தெரிவிக்கிறது.

(இ-10)

## இயக்குநர் சபைகள் தெரிவு

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர் சபைகள்தெரிவு பொதுக் கூட்டங்கள் மூலம் இம் மாத இறுதிக்குள் புதிதாக அமைக்கப்படவேண்டும் என யாழ். மாவட்ட கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் அறிவித்துள்ளதையடுத்து சங்கங்கள் பொதுக் கூட்டங்கள் மூலம் புதிய இயக்குநர்களைத் தெரிவுசெய்து வருகின்றன.

பனை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை தெரிவு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ஐ 117)

## விலை வீழ்ச்சி

சாவகச்சேரி சந்தையில் மரக்கறிகளின் விலைகள் திடீரென வீழ்ச்சி அடைந்துள்ளன.

கிலோ 80 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட மரக்கறிகள் 30 ரூபாவாக வீழ்ச்சி அடைந்துள்ளன.

சாவகச்சேரி வர்த்தக நிறுவனமொன்றுக்கு பெருமளவு உருளைக்கிழங்கு வந்ததையடுத்தே மரக்கறிகளின் விலை வீழ்ச்சியடைந்தன.

உருளைக்கிழங்கு கிலோ 70 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

இதே வேளை கிலோ 200 ரூபாவாக விற்கப்பட்ட பச்சைமிளகாய் ரூபா60 ஆகக் குறைந்துள்ளது. (இ-117)

# ஜனாதிபதியின் கருத்தால் நீதித்துறையில் குழப்பம்

கொழும்பு, ஜன. 5

கடந்தவாரம் ரூபவாஹினி தொலைக்காட்சி சேவையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சட்டமா அதிபரின் செயற்பாடுகள் குறித்து வெளியிட்ட கண்டனங்கள் நீதித்துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகளிடையே குழப்பத்தை உருவாக்கியுள்ளன என 'ராவய' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

விஜயகுமாரணதுங்கா படுகொலை, கொப்பேகடுவ படுகொலை, காணாமற் போனோர் பற்றிய விசாரணைக்குழு ஆகியனவற்றின் அறிக்கைகள் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டிருந்த போதிலும் சட்டமா அதிபர் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என தொலைக்காட்சியில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த ஜனாதிபதி தெரிவித்தார்.

அந்த அறிக்கைகள் தொடர்பாக ஞாபகமூட்டல் கடிதங்கள் பல அனுப்பப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என ஜனாதிபதி அந்தப் பேட்டியில் குறிப்பிட்டிருந்தார்.

(இ-10)

## நிவாரணம்

வட்டுக்கோட்டை, ஜன 5

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகப்பகுதியில் மேலும் 300 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வு நிவாரணமான 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் மக்கள் மீளக்குடியமர்ந்த முன்னுரிமை அடிப்படையில் இக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

(ஐ-12-5)

## ஆசிரிய கலாசாலைகள்

யாழ்ப்பாணம், ஜன. 5

பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகள் இம்மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு வகுப்புகள் ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

# வடக்கு - கிழக்கு தீர்விலேயே நாட்டின் பொருளாதார சுபீட்சம்

## ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு. ஜன. 5

வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர வழங்கப்படும் தீர்விலேயே நாட்டின் பொருளாதார சுபீட்சம் தங்கியிருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கம் முன்வைத்திருக்கும் அரசியல் பிரேரணைகளை ஏற்றுக்கொள்வதை ஒரு நாளினால் கூட பிற்படுத்துபவர்களை தேசத்துரோகிகளாக கருத முடியும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

மிக உயர்ந்த சமுதாயமாக 21 ஆம் நூற்றாண்டில் காலடி எடுத்துவைப்பதா? அல்லது காட்டுமிராண்டித் தனமான சமுதாயமாக சீரழிந்து செல்வதா? என்பதை இந்த ஆண்டுக்குள் நாட்டு மக்கள் தீர்மானிக்கவேண்டும்.

இலங்கை மீனவர்களை கௌரவிக்கும் வைபவம் நேற்று கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெற்ற சமயம் உரையாற்றுகையில் அவர் மேற்கண்ட கருத்துக்களைத் தெரிவித்தார்.

அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளுக்கு விடுதலைப் புலிகள் தவிர்ந்த சகல தமிழ் அமைப்புக்களும், சகல முற்போக்கு சக்திகளும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன.

ஜே. வி. பி. இயக்கத்துக்கு பின்னால் இருந்து தெற்கில் நாசகார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திட்டங்கள் பற்றி தகவல் கிடைத்துள்ளது.

நாட்டில் எரியும் பிரச்சினைகளுக்கு முக்கிய காரணம், நீண்டகாலமாக சமூகநீதி நிலைநாட்டப்படாமல் இருந்ததே ஆகும்.

இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கும் பொறுப்பை எமது அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

நாட்டின் அரசமைப்பை இந்த ஆண்டுக்குள் மாற்றியமைக்க அரசாங்கம் எதிர்பார்க்கிறது—இப்படி ஜனாதிபதி கூறினார். (இ-3)

# ஈ.பி.டி.பியின் முதலாவது பிரசாரக் கூட்டம்

## நேற்று சித்தன்கேணியில் நடந்தது

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ். உள்ளூராட்சித் தேர்தலில் ஈ. பி. டி. பி. அமைப்பின் முதலாவது பிரசாரக் கூட்டம் நேற்று சித்தன்கேணி மகாகணபதிப் பிள்ளையார் கோயில் முன்றலில் நடைபெற்றது.

வலி-மேற்கு பிரதேச சபைக்கு ஈ.பி,டி.பி. சார்பில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர் ந. திரிலோகநாதன் (லோகன்) இக்கூட்டத்தில் பங்கு பற்றி உரையாற்றினார்.

சுமார் 500 பேர் பங்கு பற்றிய இக் கூட்டத்தில் அவர் உரையாற்றுகையில் கூறியதாவது:

மக்களின் துயர் துடைக்க எமது அமைப்பு முன்னின்று செயற்பட்டு வருகின்றது. தொடர்ந்தும் அப்பணியை நாம் மக்களுக்காக மேற்கொள்வோம்.

தேர்தலுக்காக நாம் சேவை செய்யவில்லை. மக்களின் மீட்புக்காகவே பணி செய்கிறோம்.

தொடர்ந்தும் வேலை வாய்ப்பு உட்பட பல்வேறு பணிகளை மேற்கொள்வோம் —என்றார்.

வடக்கு - கிழக்கு இணைப்புக்காக எமது அமைப்பு தொடர்ந்து பாடுபடும் என்றும் அவர் கூறினார்.

வே. மகேந்திரன் உட்படப் பலர் உரையாற்றினர்.

(இ-3)

# ஆண்டு - 5 புலமைப் பரிசில் பெறுபேறுகள் இம் மாதம்

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற ஆண்டு 5 க்கான புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் இம்மாதத்தில் வெளியாகும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் காமினி குணரத்தின தெரிவித்துள்ளார்.

பெறுபேறுகளை கணனிக்குள் உட்புகுத்தும் பணிகள் யாவும் முடிவடைந்துள்ளன எனத் தெரிவித்த அவர் கடந்த ஒக்ரோபர் மாதத்தில் கலதாரி ஹோட்டல் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலால் ஏற்பட்ட அதிர்ச்சி காரணமாக கணனிகள் செயற்படவில்லை எனவும் அச் சம்பவம் இடம்பெறாதிருப்பின் பெறுபேறுகளை வெளியிடுவதில் இவ்வளவு தாமதம் ஏற்பட்டிருக்காது எனவும் தெரிவித்தார்.

இப்பரீட்சைக்கு 2 இலட்சத்து 52 ஆயிரத்து 785 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர். (இ-10)

## நாளை

மார்கழி 22

செவ்வாய்க்கிழமை

திதி: அட்டமி

முற்பகல் 8.46 வரை.

நட்சத்திரம்: ரேவதி

பிற்பகல் 12.38 வரை.

சுபநேரம் 11 01-12.31

ராகுகாலம்: 3 31-5.01

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## பன்றி தாக்கி இளைஞன் காயம்

பனம் பாத்தியை அழித்துக் கொண்டிருந்த காட்டுப் பன்றியை நாய்களின் உதவியுடன் துரத்தியபோது வேகமாக ஓடிவந்த பன்றி தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த இளைஞர் ஒருவரைத் தாக்கிக் காயப் படுத்திய சம்பவம் நேற்று முன்தினம் மிருசுவில் வடக்கில் இடம்பெற்றது.

கையிலும், தொடையிலும் காயமடைந்த இளைஞர் சாவகச்சேரி ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

## பாதிப்புறும்..

(எட்டாம் பக்கத் தொடர்)

மாணவர்கள் தமது பணத்தினைக் கொடுத்து, தமக்குப்பிடித்த நிறுவனங்களில் தமக்குத்தேவையான பாடங்களைப்படிக்க முனைவதைக் கட்டுப்படுத்த அவன் எந்தப் பெரிய ''குரு'' வாயிருந்தாலும் முயலக்கூடாது, இது மாணவர்களின் அடிப்படைச் சுதந்திரத்தையே பாதிப்பதாகும்.

சம்பந்தப்பட்டவர்கள், புத்திஜீவிகள், மற்றும் திணைக்களங்களைச் சேர்ந்தவர்கள் இக்குறைபாடுகளைச் சீர்திருத்த உடன் நடவடிக்கை எடுக்குமாறும், மாணவர்களின் நலனில் அக்கறை காட்டுமாறும் வேண்டுகின்றேன்.

இ. சுகன்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சையை மாகாண மட்டத்தில் நடத்த முயற்சி

கொழும்பு, ஜன. 5

ஜி.சீ.ஈ. (சாதாரண தரப்) பரீட்சையை மாகாண மட்டத்தில் நடத்தக்கூடிய சாத்தியம் குறித்துப் பரீட்சைத் திணைக்களமும் கல்வியமைச்சும் ஆராய்ந்து வருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இந்தப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவதை அடுத்து, இந்தத் திட்டம் குறித்து ஆராயப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பட்சத்தில், மாகாண மட்டத்தில் பரீட்சைத் திணைக்களப் பிரிவுகளும் ஆரம்பிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

## அரசு-புலிகள் நிபந்தனையின்றி பேச்சு நடத்துமாறு தீர்மானம்

கொழும்பு, ஜன. 5

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று தேசிய சமாதானப் பிரதிநிதிகள் நடத்திய கூட்டம் ஒன்றில் யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு அரசையும் விடுதலைப் புலிகளையும் கோரும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

முன் நிபந்தனைகள் எதுவும் இன்றி பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும் எனவும்—

இரு தரப்பினரது கௌரவமும் நாட்டின் இறைமையும் நிலைநாட்டப்பட வேண்டும் எனவும் இந்தத் தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது. (இ-9)

## வவுனியாவில் இளைஞர் சூட்டுக்குப் பலி

வவுனியா, ஜன. 5

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பொன்னுத்துரை புவனேந்திரன் என்னும் ஓட்டோ சாரதியான இந்த இளைஞர் அவரது வீட்டில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டு, பின்னர் சுடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3-21-164)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

பர் ராஜநகு அடுத்த வார இறுதியில யாழ்ப்பாணத்திற்குச் செல்லவிருக்கின்றார். தற்போது வடபிராந்திய பிரதிப் பொலீஸ் மா அதிபர் கெமிலஸ் அபேகுணவர்த்தனவுக்கு உதவுவதற்காகப் பிராந்தியங்களுக்குப் பொறுப்பாக இருக்கும் சிரேஷ்ட பொலீஸ் மா அதிபர் பீ. டி. ஏக்கநாயக்காவை அனுப்பி வைப்பதற்குப் பொலிஸ் தலைமையகம் தீர்மானித்து உள்ளது.

அத்துடன் தேர்தல் பாதுகாப்புக் கடமைகளுக்கு, பத்து பொலீஸ் அத்தியட்சகர்களும் பத்து உதவி பொலீஸ் சுபபிரின்டன்களும் அனுப்பப்பட உள்ளனர். (இ-10)

## எமது ஒறிஜினல் வெளியீடுகள்!

கேப்டன்
ராஜா சின்ன ரோஜா
ஏழை ஜாதி
சந்தனக் காற்று
சத்தியன்
ஊர்க்காவலன்
சிவப்பு சூரியன்
நல்லவன்
சத்தியா
சாட்சி
நன்றி
பாண்ட் மாஸ்ரர்
சின்ன மாப்ளே
கோயில் காளை
உரிமைக் கீதம்
உடன் பிறப்பு
மூன்றாம் பிறை
கடலோரக் கவிதைகள்
ரயில் பயணங்களில்
மூன்று முகம்
சக்கரம்
குலமகள் ராதை
நாடோடி மன்னன்

வீடியோ CD வெளியீடுகள்!

செந்தமிழ் பாட்டு
குணா
கடவுள்
ரோஜா மலரே
புன்னகை மன்னன்
காதல் ஓவியம்
சின்னக் கவுண்டர்
மண் வாசனை
தேவர் மகன்
மகளிர் மட்டும்
ரோஜா
இந்தியன்
தேடினேன் வந்தது
ஒன்ஸ்மோர்

**வீடியோவிமல்**
யாழ்ப்பாணம்.

(சி/2553)

## 2 எம். பிக்களும் அலுவலகம் திறப்பு

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆர். இராமேஸ்வரன், ஆர். ராமமூர்த்தி ஆகியோரின் அலுவலகம் நேற்று யாழ்ப்பாணத்தில் செயற்பட ஆரம்பித்துள்ளது.

வேம்படி மகளிர் கல்லூரிக்குச் சமீபமாக, ரெலிக்கொம் நிறுவனத்துக்கு அருகில் 177, முதலாம் குறுக்குத்தெரு என்ற விலாசத்தில் உள்ள கட்டடத்தில் இந்த அலுவலகம் இயங்குவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## ஆண்டு 4 முதல் O\L வரை

மாதத்தில் 25 ஆம் திகதி மாதாந்தப் பரீட்சை!

விரும்பிய நிறுவனங்களும், ஆர்வமுள்ள மாணவர்களும் தொடர்பு கொள்க.

**பரீட்சைப் பகுதி,**
**சயன்ஸ் அக்கடமி,**
**நல்லூர்.**

(52371)

## கோணேஸ்வரி...

(முதலாம் பக்கத் தொடர்)

பரராஜசிங்கம், 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை உதவி ஆசிரியர் எஸ். எஸ். செல்வநாயகம் ஆகியோர் நாளை சாட்சியமளிக்கவிருக்கின்றனர். (இ-21-3)

## ஒலுமடு..

(முதலாம் பக்கத் தொடர்)

பொருத்தலாமா என்பது குறித்து ஐந்தக்குழு ஆராய்ந்து வருவதாக விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் ஹெலியின் பெறுமதி 8 கோடியே 12 லட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-21-3)

## கந்தளாயில்...

(முதலாம் பக்கத் தொடர்)

பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அனுருத்த ரத்வத்தவும் அவரது குழுவினரும் சென்ற பாதையில் மேலதிகமாக 200 படையினர் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்தனர்.

எம். ஐ. - 24 ரக ஹெலிகள் இரண்டு பாதைக்கு மேலாக வானத்தில் பறந்து பாதுகாப்பு அளித்த வண்ணம் சென்றன.

கந்தளாய்க்கும் திருகோணமலைக்கும் இடையில் அனுருத்த ரத்வத்தவின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்க முடியாது என்று விமானப் படை அதிகாரிகள் தெரிவித்ததே இதற்குக் காரணம் என்று சண்டே ரைம்ஸ் வார இதழில் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

திருமலைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் நான்கு ஏவுகணைப் பிரிவினர் இயங்குவதாக சமீபத்தில் உளவுத் தகவல்கள் தெரிவித்திருந்தன.

கடந்த நவம்பர் 5ஆம் திகதியில் இருந்து இலங்கை விமானப் படையும் தனது விமானப் பறப்புகளை இப்பகுதியில் மட்டுப்படுத்தி உள்ளது. (இ-10)

## தேர்தல் முறைப்பாடு..

(முதலாம் பக்கத் தொடர்)

சகர் மஹிந்த ஹெட்டியாராட்சி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத் தேர்தலில் போட்டியிடும் ஈ.பி.டி.பி, புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் சுயேச்சைக்குழுப் பிரதிநிதிகளுக்கு நேற்று ஏற்பாடு செய்த கூட்டத்திலேயே அவர் இப்படிக் கூறினார்.

யாழ். பொலீஸ் நிலையத்தில் நடந்த இக்கூட்டத்தில் தேர்தல் கடமைக்கென அமைக்கப்பட்ட பொலீஸ் குழுவில் அங்கம் பெறும் பொலீஸ் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அக்கூட்டத்தில் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் மஹிந்த ஹெட்டியாராட்சி தெரிவித்த முக்கிய சில விடயங்கள் வருமாறு:

★ நீண்டகாலத்தின் பின்னர் இங்கு நடைபெறும் தேர்தலில் பங்குபற்ற வந்துள்ள கட்சிகள் சுமுகமான, ஜனநாயகமான, நேர்மையான தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்யவேண்டும்.

★ வாக்காளர்கள் தமது வாக்குரிமையை சுதந்திரமாகப் பாவிக்க உதவவேண்டும்.

★ பிரசாரத்தில் ஈடுபடும் கட்சிகள் ஒருவரின் பிரசாரத்தில் மற்றவர் தலையிடாமல் சுமுகமாகப் பிரசாரப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

★ தேர்தல் வாக்களிப்பு நிலையங்களுக்குள் எவரும் ஆயுதங்களுடன் செல்ல முடியாது. இராணுவத்தினரும் உள்ளே செல்ல முடியாது. பொலீஸார் மட்டுமே அங்கு பணிபுரிவர். (இ-3-9)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்)

கப்படும் என்றே எமது கட்சி எதிர்பார்க்கிறது, நம்புகிறது.

எமது கட்சி தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரிக்கவில்லை.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இந்தியாவின் புதிய பிரதமராக வருவார் என நம்பப்படும் அட்டல் பிஹாரி வாஜ்பாய்.

வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கடந்த வாரம் இந்தியா சென்றிருந்தபோது அங்குள்ள அரசியல் தலைவர்கள் பலரையும் சந்தித்தார். அவ்வேளை வாஜ்பாயையும் சந்தித்தார். அப்போதே வாஜ்பாய் இக்கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

பாரதீய ஜனதா கட்சி வன்செயலையும் பயங்கரவாதத்தையும் ஆதரிக்கவில்லை. பிரிவினை இயக்கம் எதனையும் அது ஆதரிக்காது. விடுதலைப் புலிகளையும் எமது கட்சி ஆதரிக்கவில்லை. அதனுடன் எவ்வித தொடர்பும் இல்லை என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி சந்திரிகாவுடன் பாகிஸ்தான் சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அங்கிருந்து இந்தியா சென்றார்.

அவர் பிரதமர் குஜ்ராலையும் சந்தித்துப் பேசியதோடு அவருடன் புட்டபர்த்திக்கும் சென்றிருந்தார். அங்கு புதிய சர்வதேச விளையாட்டு மைதானத்தைத் திறந்து வைக்கும் நிகழ்விலும் இந்தியப் பிரதமருடன் பங்குபற்றினார்.

சோனியா காந்தி, பிரணாப் முகர்ஜி, முரசொலி மாறன், சந்திரபாபு நாயுடு ஆகியோரையும் அமைச்சர் கதிர்காமர் சந்தித்துப் பேச்சு நடத்தினார். (அ)

## ஹெலி மீதான...

(முதலாம் பக்கத் தொடர்)

கடந்த வெள்ளிக்கிழமை ஒலுமடு இராணுவ தளத்தில் தரித்து நின்ற ஹெலியை இலக்குவைத்து கரும்புலிகள் ஊடுருவி மோட்டார் தாக்குதல் நடத்தியதாகவும்—

கரும்புலிகளுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்றும் — ''புலிகளின் குரல்'' மேலும் தெரிவித்தது. (இ-164-3)

## இறால் விற்பனைக்கு

தம்பாட்டி கிராமிய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் நாளாந்தம் தொழிலாளர்களிடம் பெற்றுக் கொள்ளும் இறாலை கொள்வனவு செய்வதற்கு விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

**பொ. குமாரசாமி**
(செயலாளர்)
த. கி. க. கூ. சங்கம்,
தம்பாட்டி,
ஊர்காவற்றுறை.

(52338)

## ★ கொழும்பு விலைக்கே யாழ்ப்பாணத்தில் வாங்கலாம்!

அனைவரும் விரும்பிப் பயன்படுத்தும்

**லீலா கலண்டர்கள், டயறிகள்**

வாருங்கள் உதயன் விளம்பர கருமபீடத்துக்கு — பிந்தாதீர்கள்!
உங்களுக்குத் தேவையானவற்றைப் பதிவு செய்யுங்கள்!

★ மொத்தமாகப் பெற்றுக்கொள்வோருக்கும், வியாபாரிகளுக்கும் விசேட கழிவுகள்.

**உதயன்**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05 - 01 - 1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org